1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 5-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு மார்சிமாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## வீரச் சிறு குழு

(மகா மேன்மைதங்கிய எல். மத்தியாஸ் ஆண்டவர், சென்னை அதிமேற்றிராணியார்.)

(சென்றவாரத் தொடர்ச்சி)

பொருளாதார—சமூக துறையில் உலகம்குழம்பித் தத்தளிக்கிறது. ஒரு ஆசிரியர் எழுதுகிறார்: "நவீனசமூகக்கொள்கைகள் எத்தகைய ஆபாசத்திற்கும் நியாயஉடை வழங்கிவிடுகின்றன. கர்ப்பச்சிதைவின் பெயரால் எண்ணற்ற கொலைகள். குடும்பஅமைப்பின் பெயரால் குடும்பங்களின் சீர்கேடும், அழிவும். விவாகரத்தின் பெயரால் கடவுளின் சந்நிதானத்தில் ஒன்றுசேர்க்கப்பட்ட கலியாண ஒப்பந்தங்கள் கன்னாபின்னாவென்று சின்னாபின்னமாக்கப்படுகின்றன. இன்றைய இளந்தாய் நினைக்கிறாள், தன்னுடைய வயிற்றில் இன்னொரு குழந்தை இரண்டாவதாக வந்துவிட்டால், அது தனக்குப் பெரிய துரதிர்ஷ்டம்' என்று. அதைப்பற்றி அவள் முறுமுறுக்கத் தயங்குவதுஇல்லை. குடும்பஎண்ணிக்கையை வளரவிடாமல் தடுப்பதில் இரகசியம் எதுவும் இல்லை என்றும் அப்பட்டமாகப் பேசிவிடுகிறாள். கோடிக்கணக்கான ரூபாக்கள் குடியிலும், புகையிலும், சினிமா கேளிக்கைகளிலும் கொள்ளையோகொள்ளை போகின்றன. எந்த மனிதர் முதலாளித்துவக் கோட்டையினுள்ளே பணம்முடங்கிக் கிடக்கிறதுஎன்று முறையிட்டு மூதலைக்கண்ணீர் வடிக்கிறார்களோ அந்த மகானுபாவர்களே இப்படிப்பணத்தை விரயம் செய்கிறார்கள். எதுவுமே மிஞ்சிக் கிடக்கவேண்டியகாலத்தில் பஞ்சமும், பட்டினியும் தலைவிரித்தாடுகின்றன ஊரெல்லாம், உலகமெல்லாம்."

மதம், கல்வி, கலாசாரம் இவைகளைப்பற்றி என்னசொல்வது? இந்த வார்த்தைகளெல்லாம் புராணகாலத்துக் கற்பனைகளாகத் தென்படுகின்றன, இன்றைய நாளிலே. ஒருசோவியற் எழுத்தாளனின் வார்த்தையிலே, "வேதவிசுவாசம், கடவுளைப்பற்றிய எண்ணம் ஆகிய இவைகளுக்குப் பதிலாக விஞ்ஞானத்தையும், இயந்திரத்தையும் பற்றிய எண்ணங்களைப் புகுத்த வேண்டு"மாம். உலகம் அல்லோலகல்லோலப் படுகின்றது; இருளிலே மூழ்கித் தவிக்கிறது; அதை அழிவினின்று காப்பாற்றுவதில் ஒரு நிமிஷ முதலாய்த் தாமதப்படலாகாது. ஆனால், காப்பாற்றுவது யார்? யாரால் இயலும்?

புரட்சிக்காரர்களில் மாபெரும் புரட்சிவீரனாய் விளங்குகிறவன்—தீமையேஉருவெடுத்த தீரன்— அந்த ஸ்ராலின் ஒருமுறை சொன்னான்: "போராடும் ஒருசிறுகுழுவினராலேயே புரட்சிகள் செய்யப்படுகின்றன" என்று. இந்த வாககானது பரிசுத்த 10-ம் பத்திநாதரின் வாக்கை ஒத்திருக்கிறதல்லவா? ஒவ்வொரு பங்கிலேயும் புரட்சிகரமான மாறுதல்விளைவிக்கும் விசுவாசிகளின் ஒருசிறு வீரக்குழு வேண்டுமென்று அவர்சொன்னதின் அர்த்தமும் இதுதானே! "கிறிஸ்துவர்கள் முழுக்க முழுக்கக் கிறிஸ்துவ சீவியம் சீவிக்கும் நாளில்தான் மெய்யான புரட்சிஉண்டாகும்" என்று கிளெமென்சியோ சொன்ன வார்த்தைகள் எவ்வளவுஉண்மையானவை. பிரான்சிய அரசியல்வாதியாகிய இந்த நாஸ்திகன் உணர்ந்திருந்தான், கிறிஸ்துவத்தின் — கிறிஸ்துவர்களின் சக்தியை. அதனாலேதான் இந்த வார்த்தைகள் அவனையறியாமல் வெளிப்பட்டன.

ஓ, கிறிஸ்துவர்கள் தங்கள் சக்தியை மட்டும் உணர்ந்திருந்தால் — தெய்வத்தன்மைவாய்ந்த தங்கள் உயர்ந்த லட்சியங்களுக்காகவும், கொள்கைகளுக்காகவும் அவர்கள்ஒன்றுபட்டு உழைத்துப் பாடுபட்டுச் சீவிப்பார்களேயானால், சமுதாயத்திற்கே அது எவ்வளவு பெரிய முன்னேற்ற சக்தியாக விளங்கும்? ஆனால், பொதுசன சக்தியை அவர்களுக்குப் புலப்படுத்தி ஒரேசமயத்தில் எல்லோரையும் ஆட்டுவிப்பதென்பது சிரமமானகாரியம் — முடியாத காரியம் கூட. முதலில் ஒருசிறுகுழு வேலைசெய்ய ஆரம்பிக்க வேண்டும். மாவிலே புரையேறுவதுபோல அப்புறம் விறுவிறென்று புரட்சி பரவிவிடும்.

இந்தச் சிறுகுழுவினர் புண்ணிய புருஷர்களாக இருத்தல் வேண்டும், 10-ம் பத்திநாதர் சொன்னாற்போல. தன்னிடத்தில் இல்லாததைப் பிறருக்கு யாரும் வழங்கமுடியாது. பிறரிடத்திலே கிறிஸ்துவ மணம் கமழச்செய்ய வேண்டுமென்றால் முதன்முதல் கிறிஸ்துவ புண்ணியங்களின் நறுமணம நம்மிடத்திலே வீசியாகவேண்டும். தாழ்ச்சி எல்லாப்புண்ணியங்களுக்கும் அஸ்திவாரமாகும். பிறருடைய ஆத்மீக முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டிய எவரும், எல்லா நன்மையும் பொழியும் கடவுளிடத்திலே எல்லையற்ற நம்பிக்கையை உண்டுபண்ணும் இந்தத்தாழ்ச்சியென்ற புண்ணியத்தை அடைந்திருக்கவேண்டும். சிநேகம் கடவுளின்கற்பனைகளில் முதன்மையானதும், முக்கியமானதும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## "மகனே! இந்தக் குருமடம்..."

நியூயோக்நகரின் அதிமேற்றிராசன குருமடம் அங்கு டன்வீடிஎனுமிடத்தில் அப்போது கட்டப்பட்டுவந்தது. அஃது இன்னமும் முற்றுப்பெறாதிருக்கும்போதே அந்நகரில் வசித்திருந்த ஓர்பத்தியுள்ள தாய் மிற்றிஎனப்பெயரிய தனது அருமைப்புதல்வனை அக்குருமடத்துக்கு அழைத்துப்போய், அதனை அவனுக்குச் சுட்டிக்காட்டி: "மகனே, இந்தக்குருமடம் உனக்குமாகவே கட்டப்படுகிறது. இன்னும்சிலகாலத்தில் நீயும் இந்தக்குருமடத்திற் சேர்ந்து ஓர் குருவாக வரவேண்டுமென ஆசித்து இறைவனைப்பிரார்த்திக்கிறேன். அவர்திருவருளால் எனதுமன்றாட்டு அனுகூலமாகுமென நம்புகிறேன். நீயும்அவ்விதமே மன்றாடிவருவாயாக" என்று அன்பொழுகக் கூறிநின்றாள். தாய் ஆசித்துப் பிரார்த்தித்துவந்த பிரகாரம் அப்பாலியர் சிலகாலத்தின்பின் அக்குருமடத்தில் சேர்ந்தார். வேதசாஸ்திரம்கற்றுக் குருப்பட்டம்பெற்றார். பிந்த அதேகுருமடத்தின் அதிபராகவந்தார். அதிலே ஓர்வேதசாஸ்திர பேராசிரியராய் விளங்கியிருந்தார். எத்தனையோ குருமாரைப் பிறப்பித்தார். கடைசியாகச் சோல்ற்லேக்நகர் மேற்றிராணியாராக நியமனம்பெற்றுப் பிரஸ்தாபமுற்றிருந்தார். அந்தப்பத்தியுள்ளதாயும், அவள்புதல்வனும் செய்த அருந்தியாகந்தான் என்னே! அடைந்துகொண்ட பெரும்பாக்கியந்தான் என்னே!

தற்காலம் பரிசுத்த பாப்பரசரும், சகல மேற்றிராணியார்களும் உலகமடங்கலுமே குருமடங்கள்மட்டிலும், குருப்பிரசாதிகளின் விருத்திமட்டிலும் கண்ணுங்கருத்துமாக இருந்துவருவதைக் கத்தோலிக்கமக்கள் நன்கறிவார்கள். அவர்கள் எடுத்துவரும் கரிசனையும், அயராமுயற்சியும் வெற்றியளிக்குமாறு — மிக்க பலனளிக்குமாறு கைகொடுத்துதவ வேண்டியவர்கள்யார்? முன்னர் எடுத்துக்காட்டிய மிற்றியென்னும் மேற்றிராணியாரின் மாதாவைப்போலும் தேவபக்தியும், வேதாபிமானமும் படைத்த கத்தோலிக்க தாய்மார் அன்றோ! ஆதலால் இவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தேவபக்தியும், பிறராத்தும இரட்சணிய அபேட்சையும் உடையோராக வளர்க்கவேண்டும். குருத்துவததுக்கெனப் பிள்ளைகள் பயிற்றப்பட்டுவரும் குருமடத்தை அவர்களுக்குக் காட்டவேண்டும். அதன்மூகமாக அவர்களைவழிநடத்தவேண்டும். இதுவிஷயமாய் மிற்றி மேற்றிராணியாரின் சம்பவம் அவர்கள் மனதிலே பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கவேண்டும்.

குருத்துவபதவி வானதூதர்களுக்கும எட்டாத ஓர்மகத்துவ பதவி. குருத்துவ ஊழியம் தேவ ஊழியம். குருமார் கிறீஸ்துநாதரின் பிரதிநிதிகள். அவர்கள் கிறீஸ்தவர்களின் ஞானத்தந்தையர்கள். உலகத்தின் உயிரும் ஒளியும் ஆனவர்கள். அவர்களின் கரங்கள் நித்தியவார்த்தையானவரைத்தொடவும், ஏந்தவும் வல்லமையுள்ளவைகள். அவர்களின் இணையற்ற மகத்துவத்தைச் சரிவர உணர்ந்துகொண்டமையாற்றான், ஓர் குருவானவரையும், ஓர்சம்மனசானவரையும் நான் சந்திக்கநேர்ந்தால் முதலில் குருவானவரையே வணங்கி, முதலில் அவர் கரங்களையே முத்தமிடுவேன் என்று பெரிய அர்ச்சியசிஷ்டவரான ஐந்துகாயப் பிரான்சீஸ்கு மொழிந்திருக்கின்றார். இவைகளைக் கண்டறிந்தே தேவபக்தியிற் சிறந்தபெற்றோர் தங்கள்பிள்ளைகளை நல்லமாதிரியாக வளர்த்துத் தேவ ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து மேலான மகிமை சலாக்கியங்களுக்கு வழி தேடிக்கொள்ளுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## ஜனாதிபதியின் விஞ்ஞாபனம்

— வாஷிங்டன்

"உலக சமாதானத்தைக் காக்க வேண்டியது, சுதந்திர உலகம் ஒத்துச் செய்யவேண்டிய தலையாய பணியாகும். இவ்வகையிலே 1952-ம் ஆண்டில் கூடுதலான பொறுப்பை அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளான சுதந்திர உலக நாடுகளும் ஏற்க வேண்டும்." இவ்வாறு ஜனாதிபதி ட்ருமன் அவர்கள் அமெரிக்க காங்கிரஸ் முன்னிலையில் விடுத்த பொருளாதார விஞ்ஞாபனத்தில் தெரிவித்துக் கொண்டார். ஆக்கிரமிப்புக்கு அணை எழுப்புவதிலே வருமுன் காப்போனுகச் சுதந்திர உலகம் தொடர்ந்து கூட்டாகச் செயலாற்றவேண்டியதை அவர் வற்புறுத்திக் கூறினர். தீர்க்கதரிசனமான ஆக்க வேலைத் திட்டங்களை வகுத்துவைத்துக் கொள்வோமாயின், அதிகரிக்கும் தற்காப்பு ஏற்பாட்டினால் விளையக்கூடிய பொருளாதார சங்கடங்களைத் தவிர்த்துவிட முடியும் என்ருர் ஜனாதிபதி ட்ருமன் அவர்கள்.

## சோவியற் அரசின் நன்றி

—பரீஸ்

1921-ம் ஆண்டு முதல் 1923-ம் ஆண்டு வரையிலே சோவியற் ருஷியாவை உணவுப் பஞ்சம் வாட்டியது. அந்நாட்களிலே, ருஷியாவின் பஞ்சம் தவிர்க்க அமெரிக்க சகாய ஸ்தாபனங்கள் 5 கோடி 30 லட்சம் டலர் பொருளுதவி செய்தன. இந்த உதவிக்கு நன்றிகூறும் தீர்மானம் ஒன்றை 1923-ம் ஆண்டு சோவியற் சனப் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம், ஆபத்சகாயம் அளித்த அமெரிக்காவுக்கு "ஆழ்ந்த நன்றி" தெரிவித்தது. மேலும் "எமன் வாயிலிருந்து எங்கள் மக்களிலே கோடிக் கணக்கானேரை அமெரிக்க மக்கள் மீட்டதை ருஷியா முழுவதிலுமுள்ள மக்கள் அனைவரும் ஒருநாளும் மறக்கவே மாட்டார்கள்" என்றும் குறிப்பிட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தை அமெரிக்க பிரதிநிதி திரு. டோபையாஸ் அவர்கள் ஐ. நா. பொது மன்றக் கூட்டத்தில் படித்துக் காட்டியிருக்கிருர். இதிலுள்ள வேடிக்கை என்னவென்ருல், இப்போது சோவியற் அரசு செய்நன்றி மறந்து பிதற்றுவதே.

## மூடு மந்திர நாடு

—வாஷிங்டன்

சுதந்திர உலகத்தோடுள்ள தொடர்புகளைச் சோவியற் அரசு மேலும் மேலும் துண்டித்துக்கொண்டு வருகின்றது. இதற்கு மற்றுமோர் உதாரணமாக அமைகிறது, ருஷியாவின் புதிய பிரகடனம். அங்கு மேற்கொண்டு 22 நகரங்கள் வெளிநாட்டு இராசதந்திரிகள் "நுழையக்கூடாதவை" என்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் தங்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிருர்களென்று ருஷியா அங்கலாய்க்கிறது. இப்படியெல்லாம் மூடி மறைத்தால் ஏன் அயலார் சந்தேகப்பட மாட்டார்கள் என்று பளிச்செனக் கேட்கிறது, வாஷிங்ரன் "ஈவினிங் ஸ்ருர்" பத்திரிகை.

"மூடு மந்திர நாடு" என்று மகுடமிட்டுச் சோவியற்அரசு அதிகரிக்கச் செய்துகொண்டே வருகின்ற மர்ம நடவடிக்கையைப்பற்றி அப்பத்திரிகை தீட்டும் தலையங்கம் வருமாறு:- சோவியற் ருஷியாவில் பிரவேசத் தடை விதிக்கப்பட்டுள்ள நகரங்களின் இடாப்பானது வால்போல வளர்ந்து கொண்டே போகிறது. இப்போது மேலும் 22 நகரங்கள் இருட்டுக் கிடங்குள் தள்ளப்படுகின்றன. இதன் அர்த்தம் என்ன?

வெளிநாட்டு ஸ்தானிகர்கள் முதலான இராசதந்திரிகள் மஸ்கோநகரைச் சுற்றி 25 மைல் தூரமவரையில் கனத்த கட்டுக் காவலுடனேயே நடமாடமுடியும் என்பதே இதன் பொருளாகும். இந்த எல்லையைத் தாண்டி அந்தப்பக்கம், இந்தப்பக்கம் தலை காட்ட முடியாது. லெனின்கிருட் போன்ற ஒருசில நகரங்களைத் தவிர ருஷியா முழுவதையும் கம்யூனிஸ்த சர்வாதிகாரிகள் இப்படிப் பூட்டி வைத்துக்கொண்டிருக்கிருர்கள். இந்த இருண்ட பாதாளத்துக்குள் வெளிநாட்டார் மட்டுமென்ன? வெளியேயிருந்து ஒளியோ, உண்மையோ கூட உள்ளே நுழைய முடியாதபடி செங்கொடி அரசாங்கம் தடுத்திருக்கிறது. ஏன் இப்படிக் கதவடைப்பானேன்? மஸ்கோச் சர்வாதிகார பீடமானது இன்னும் என்ன அனர்த்தத்தை—தீச்செயலை மறைப்பதற்காக இப்படிச் செய்கிறதோ? என்ற சந்தேகங்கள் உடனே தோன்றுகின்றன.

தங்கள் நாட்டையும், நடவடிக்கைகளையும் இவ்வாறு மூடு மந்திரமாக வைத்துக்கொண்டு விஷின்ஸ்கிகளும், மொலற்ருெவ்களும், மாலிக்குகளும் ஏன் அவர்களுடைய 'குரு' ஸ்ராலினும் கூடத்தான்—ஐ. நா. ஸ்தாபனத்தின் முன்னிலையிலும், ஏனைய பொது மேடைகளிலும் "அட பாவமே, எங்கள் சோவியற் நாட்டினைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பானேன்?" என்று ஒன்றும்அறியாத அப்பாவிகள்போல் கேட்கிருர்களே? இப்படிப்பட்டவர்கள் அணுசக்திக் கட்டுப்பாட்டைப்பற்றி நம்மைக் குற்றஞ் சொல்லிக்கொண்டு "நாங்கள் சொல்வதை நம்பவேண்டும்" என்று கேட்கிருர்களே? விடை தேவையில்லை. சோவியற் பொய்வேலை பெருகி வருகிறது.

## கோறிய யுத்த கைதிகள்

—நியூயோக்

கோறியாவிலே ஐ. நா. படைகள் வசம் இருக்கின்ற கம்யூனிஸ்த யுத்த கைதிகளிலே பத்துலட்சத்துக்குமேற்பட்டவர்கள் திரும்பவும் தங்கள் தாய் நாடுசேர விரும்பவில்லை" என்று கருதினல் பிரான்சிஸ் ஸ்பெல்மென் ஆண்டவர் சென்ற 29-ந் திகதி இங்கு நியூயோக் ஸ்ரேற் (இராச்சிய) வழக்கறிஞர்சங்க கூட்டத்தில் பேசுங்கால் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:- கோறியாவிலே கைதிகளான கம்யூனிஸ்தர்கள் 15 லட்சம் பேரில் நூற்றுக்கு 72 வீதத்தினர் தாயகம் திரும்ப விரும்பவில்லை. இவர்களிலே 300 சீனப் போர்வீரர்கள் "நான் ஒரு கம்யூனிஸ்த எதிர்ப்பாளன்" என்று சீன, கோறிய, ஆங்கில எழுத்துக்களில் பச்சைகுத்திக் கொண்டிருக்கிருர்கள். யுத்த கைதிகள் எல்லாரையும் ஒருங்கே திருப்பி அனுப்பவேண்டும்; அவர்களுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கணக்கெடுக்கக்கூடாது என்று போர்நிறுத்தப் பேச்சில் ஈடுபட்டுள்ள கம்யூனிஸ்தர்கள் வாதாடுகின்றனர். ஐ. நா. பக்கத்தினர் இந்தக்குயுக்தி வாதத்தை ஏற்கவில்லை; அவரவர் விருப்பப்படி நடப்பதே அவர்களது மனிதஉரிமையை மதிப்பதுஎன்பது ஐ. நா. பக்கத்தினர் தீர்மானம். "நான் ஒரு கம்யூனிஸ்த எதிர்ப்பாளன்" என்று பச்சை குத்திக்கொண்டிருக்கிற 300 சீனர்களும், ஐ. நா. போர் முன்னணியில் நின்று தங்கள் கம்யூனிஸ்த கண்டனத்தைச் செயலளவில் காட்டச் சந்தர்ப்பம் அளிக்கும்படி கோருகின்ருர்கள்.

# சுதேச வர்த்தமானம்

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

வருடத்திலே முதலாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு நிகழும்மாசிமாசம் 25-ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். நீதியரசர் சங். சொக்ஸி அவர்கள்வந்து விசாரணை நடத்தவிருக்கின்ருர்.

## மாசி 14-ந் திகதி

எலிசபேத் இளவரசியும், எடின்பறோ கோமகனும் இலங்கைக்குவருவதைக் கௌரவிக்குமுகமாக வருகிற 14-ந் திகதி வியாழக்கிழமை ஓர் அரசாங்க விடுமுறைநாளாகவும், வங்கிவிடுமுறைநாளாகவும் பிரகடனஞ்செய்யப்பட்டிருக்கிறது.

## கொழும்புப்பொருட்காட்சி

கொழும்புப் பொருட்காட்சியானது நிகழும் மாசிமாதம் 16-ந் திகதி சனிக்கிழமைகாலை 10 மணிக்கு எடின்பறோ கோமகளான எலிசபேத் இளவரசியால் திறந்துவைக்கப்படும். இக்காட்சி சனி, ஞாயிறுஆகிய இருதினங்களிலும் காலை 10 மணிக்கும், இரவு நடுச்சாமம் 12 மணிக்குமிடையிலும், ஏனைய தினங்களிலெல்லாம் பிற்பகல் 2-30 மணிக்கும், 9-30மணிக்குமிடையிலும் திறந்துவைக்கப்பட்டிருக்கும். மாசி 16-ந் திகதி பிற்பகல் 12-30 மணிக்குப்பின் காட்சித் தலத்துக்குப் பிரவேசச் சலாா விபரம் வருமாறு: பன்னிருவயசுக்கு மேற்பட்டவர்களுக்கு ரூபா 1. பன்னிருவயசுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குச் சதம் 50.

## கவணர்—ஜெனறல்

இலங்கைக் கவர்ணர்-ஜெனறலான சோல்பறிபிரபு வருகிற பங்குனிமாதம் 5-ந் திகதி மூன்றுமாத விடுமுறையிலே இங்கிலாந்து செல்லவிருக்கின்ருர். மறுபடி ஆனிமாதம் 22-ந் திகதிவரையில் இலங்கைவந்து சேருவார். அதுவரையில் பிரதம நீதியரசரான சேர் அலன் றெஸ் அவர்கள் அவரிடமாயிருந்து அரசாங்க பரிபாலனஞ்செய்து வருவார். சோல்பறிபிரபு 1949-ம் ஆண்டு இலங்கைக்குவந்தவர். அதுமுதல் அவர் தம்சுயநாடுசென்றதில்லை.

## முத்துச்சிப்பிப் பரிசோதனை

கடற்தொழில் அதிகாரிகள் மறிச்சுக்கட்டி முத்துச்சிப்பிப் பார்களில் இதுவரை பரிசோதனை நடத்தியுள்ள பகுதியில் நல்லபலன் கிடைத்திருப்பதால் முத்துச்சலாபம் பொதுவிலே நல்ல பலனைக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை எடுக்கப்பட்ட சிப்பிகளிலே பலவிலையுயர்ந்த முத்துகள் கிடைத்திருப்பதாகவும், முழுப்பரிசோதனையும் முடிந்தபின்னரே முத்துச்சலாபம் நடத்தும் திகதியை அதிகாரிகள் குறிக்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## வீதிப்பாதுகாப்பு விளம்பரம்

இலங்கையிலே வீதிப்பாதுகாப்பு சம்பந்தமாய்க் கவர்ச்சிகரமான காட்சிகளை வர்ணித்துக்காட்டுகின்ற முதற்தரமான பெரியசுவர்விளம்பரப் பத்திரங்களைத் தயாரித்துக்கொடுப்பாருக்கு முறையே 1000 ரூபா, 500 ரூபா, 250 ரூபா பரிசில்கள் அளிக்கப்படவிருக்கின்றன. இந்த விளம்பரப் போட்டி வருகிற பங்குனிமாதம் 14-ந் திகதி முடிவாகும். இதுபற்றிய ஒழுங்குகளும், பிறவிபரங்களும் 25-1-52 வெளியான 'கெசற்' றிலே பிரசித்தஞ் செய்யப்பட்டுள்ளன. இப்பிரதிகள் படித்தறியுமாறு தபாற்கந்தோர்களிலும் கிடைக்கக்கூடியன.

## பவுண்—டலர்—பணமாற்று

புதிய பணமாற்று விகிதங்களின்படி பிரித்தானிய பவுண்ஒன்றின் இலங்கைப்பெறுமதி 13 ரூபா 36 சதமாகவும், அமெரிக்க டலர்ஒன்றின் இலங்கைப்பெறுமதி 4 ரூபா 81 சதமாகவும் விதிக்கப்பட்டிருப்பதாகக் 'கெசற்' றிலே பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஏனையநாடுகளின் பெறுமதி விகிதங்கள் வருமாறு: ஆஸ்திரேலிய பவுண்—10 ரூபா 75 சதம். கனடா டலர்—4 ரூபா $77\frac{1}{2}$ சதம். பிரான்சிய பிருங்—01·4 சதம். இந்திய ரூபா—1 ரூபா. மலாயா டலர்—1 ரூபா 57 சதம். பாகிஸ்தான் ரூபா—1 ரூபா 44 சதம்.

## வாழ்க்கைச் செலவு

இலங்கையிலே வாழ்க்கைச்செலவுப் புள்ளிகள் சென்றதையிலே முந்திய மாசத்தொகையிலும்பார்க்க இருபுள்ளிகளால் அதிகரித்திருக்கின்றன. சென்ற மார்கழிமாதத்தொகை 288. கொழும்பிலே புறக்கோட்டையில் கூட்டுறவு மத்தியசந்தைத் திறப்புவிழாவின்போது உள்நாட்டுமந்திரியார் சேர்ஒலிவர் குணதிலகாஅவர்கள் இவ்வாறு தெரிவித்திருக்கின்ருர். இவ்விதம் வாழ்க்கைத்தரம் இருபுள்ளிகளால் அதிகரித்தமையாலே அரசாங்கம் உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகமாக இரண்டரைலட்சம்ரூபா கொடுக்க வேண்டிவருமெனத் தெரியவருகிறது.

## ஆறரைக் கோடிரூபா

கொள்வனவுசெய்யும் துறைகளிலே விலைவாசிகள் மிகவும் அதிகரித்திருக்கும் காரணமாக அரசாங்கம் இவ்வருடத்திலே அரிசிக்கென்று உதவும் சகாயப்பணம் 20கோடிரூபாவுக்கு மேற்படுமென்று சொல்லப்படுகிறது. விலை குறைத்துக் கொடுக்கப்படும் கூப்பன் அரிசிக்கென அரசாங்கம் தற்போது 13கோடியே 50லட்சம்ரூபா செலவிடுகின்றது. இவ்வருடத்திலே அரிசிக்கென்று உதவப்படும் சகாயப்பணம் மிகப்பெருந்தொகையாக அதிகரிக்கும் போதிலும் கூப்பன்அரிசியைப் படி ஒன்று 25 சதமாகவே விற்கவேண்டுமென அரசாங்கம் எண்ணுகிறது.

## அரசரின் கிண்ணப்பரிசில்

கொழும்பிலே இம்மாதம்நடைபெறவிருக்கின்ற பெரியகுதிரைப்பந்தையத்துக்கென்று அரசபெருமான் சன்மானித்த கிண்ணப்பரிசில் கொழும்பு வந்துசேர்ந்திருக்கிறது. போட்டிப்பரிசிலாகிய இந்தக்கிண்ணம் ஒரு அடிக்குமேல் உயரமுள்ளது. வெள்ளிகொண்டு செய்யப்பட்டது. இராசசின்னங்கள் அதிலேபொறிக்கப்பட்டிருக்கின்றன.

## பெற்றேல், மண்ணெண்ணெய்

எண்ணெய்க் கம்பெனிகள் பெற்றோலினதும், மண்ணெண்ணெயினதும் விலைகளைக் கலன்ஒன்றுக்கு மூன்று சதம் உயர்த்துவதற்கு அனுமதியளிக்க அரசாங்கம் உடன்பட்டிருக்கிறது. ஆனல், இந்தவிலையேற்றங்கள் அவற்றைப் பாவிப்பாரை எந்தவகையிலும் பாதிக்கமாட்டாது. ஏனெனில், பெற்றோலுக்கும், மண்ணெண்ணெய்க்கும் இருந்துவந்த தீர்வைவீதங்கள் சென்ற 3-ந் திகதி தொடக்கம் கலன்ஒன்றுக்கு மூன்றுசதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

## பொருட்காட்சி முத்திரைகள்

முன்னர் அறிவித்திருந்தபடி, கொழும்புப் பொருட்காட்சி நடைபெறுங் காலத்திலே இரு இனமான விசேஷ ஞாபக தபால்முத்திரைகள் பாவனைக்கு விடப்படும். 5 சதம், 15 சதம் பெறுமதியுள்ள இந்தத் தபால்முத்திரைகள் பொருட்காட்சி திறந்துவைக்கப்படும் தினமாகிய இம்மாசம் 16-ந் திகதி சனிக்கிழமை விற்பனைக்குள்ளாகி அடுத்த வைகாசிமாதம் 31-ந் திகதி வரையில் விலைப்பட்டுவரும். இவற்றின்நிறம் பச்சையும், நீலமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசரும் முஸ்லீம் அரசரும்

தமது தந்தையாரான அப்துல்லாமன்னர் சதிமானமாகக் கொலைசெய்யப்பட்டபின் அவரிடமாகச் சிம்மாசனமேறிய திருன்ஸ் யோர்தான் நாட்டின் புதிய அரசரான ரலால்மன்னர் சென்றவாரம்வத்திக்கான் மாளிகைசென்று பரிசுத்த பாப்பரசரின் பேட்டிபெற்று அவரால் இராசமரியாதையுடன் வரவேற்கப்பெற்ருரெனச்செய்திகிடைத்திருக்கிறது. சமீபத்திலே ரலால் அரசர் திருன்ஸ் யோர்தான்நாட்டின் தலைப்பட்டணமாகிய அம்மன்நகர் அதிமேற்றிராணியாரான மிக்காயேல் அசாவ் ஆண்டவருக்கு அளித்த பேட்டி ஒன்றில், யோர்தான் நாட்டில்வாழும் 13,850 கத்தோலிக்க பிரசைகளின் பூரண விசுவாச பிரமாணிக்கத்தை அவருக்குத் தெரிவித்துநின்ருர். அவ்வேளை அரசர்பேசியபோது: "எனது அதிகாரத்துள் அடங்கியமட்டிலே எனது பிரசைகளுக்குப் பயன்படக்கூடியதாயிருக்க ஆனதெல்லாம் செய்வேன். சிம்மாசனத்தின் முன்பாக முஸ்லீம்களுக்கும், கிறீஸ்தவர்களுக்குமிடையே எத்தகைய பாரபக்ஷமும் காண்பிக்கப்படமாட்டாது. தமதுமூலமாக எனது மரியாதையையும், வணக்கத்தையும் நிச்சயமாகத் தெரிவித்துக்கொள்ள ஆசிக்கிறேன் என்பதைப் பரிசுத்த பாப்பரசருக்குத் தெரிவிப்பீராக" எனக் கூறலாயினர்.

### ருஷ்யவிமானியின் குருபதவி

முன்னர் ருஷிய ஆகாயப்படையிலே போராடும்விமானங்களைச் செலுத்திய விமானி ஒருவர் தற்போது ரோமாபுரியிலுள்ள பாப்பரசரின் ருஷியகுருமடத்திலே குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்ருர். இவர் 'அலெக்ஸ்" என்று மாத்திரம் அறியப்படுகின்ருர். சென்றயுத்தத்தில் இவர் மின்ஸ்க் நகருக்குச் சமீபமாய் ஜேர்மனியரால் சுட்டுவிழுத்திச் சிறைபிடிக்கப்பட்டு மேற்கு ஜேர்மனியிலிருந்த ஓர் சிறைமுகாமில் வைக்கப்பட்டிருந்தார். யுத்தம் முடிந்ததும் இவர் ருஷியாவுக்குத் திரும்பாது இத்தாலிக்குச்சென்று அங்கே இடம்பெயர்க்கப்பட்டவர்களின் முகாம் ஒன்றில் வசித்துவரும்போது ஓர் இத்தாலிய குருவானவருடன் சிநேகமாகிக் கத்தோலிக்க திருமறையில் கவர்ச்சிகொண்டவராய்ப் பிந்தஅதில் சேர்ந்துகொண்டார். இவர் படித்துவரும் குருமடம் 1929-ம் ஆண்டு 11-ம்பத்திநாத பாப்பானவரால் அடியிடப்பட்டது. இதிலே தற்சமையம் படித்துவருகின்ற சுமார் 25 குருத்துவமாணவர்களும் ஓர்நாள் ருஷியாவிலே திருத்தொண்டாற்றி வருவார்கள்.

### ஹங்கேரியின் கபடசிந்தை

ஹங்கேரியிலே குருமாரும், குருமடத்து மாணவர்களுமாக 1,500 பேர்வரையிலே அந்நாட்டின் கமயூனிஸ்த அரசாங்கத்தால் இராணுவகடமைக்குத் தெரியப்பட்டிருப்பதாக வத்திக்கான் ஆகாயவசனி கூறுகின்றது. "சமாதானத்தைப் பாதுகாப்ப"தற்கு மனிதபலம் அவசியம்வேண்டியிருப்பதாலே குருமாரையும், குருத்துவமாணவரையும் தெரியவேண்டிவந்த"தென்று அரசாங்கம் நியாயம் சொல்லுகின்றது; ஆனல், உண்மைக்காரணம் அதுவன்று; இளங்குருமார் தங்கள் தேவதொண்டுகளை நடத்தாதுதடுத்துவிடுவதே அதன் நோக்கமென்று வத்திக்கான் ஆகாயவசனி அறிவிக்கின்றது.

### ஒரே பாப்பானவர்தான்

சீனக்கம்யூனிஸ்த அரசாங்கம் கடந்தஒருவருடகாலமாக எடுக்காதஎடுப்பெல்லாம் எடுத்தும், படுத்தாதபாடெல்லாம் படுத்தியும் ஆக்கமுனைந்த சீனப்பிரிவினைச்சபையில் சீனதேசமுழுவதிலும் இரண்டாயிரம்பேரைமாத்திரமே கண்டடைந்திருக்கிறது. இதுசெய்தி அங்கிருந்தும் நாடுகடத்தப்பட்டுச் சமீபத்திலே ஹொங்கோங் போய்ச் சேர்ந்த குருமாரால் வெளியிடப்பட்டுள்ளது. சிலவாரங்களின் முன் கம்யூனிஸ்த அதிகாரிகள் நான்சாங் நகரைச்சேர்ந்த மொன்சிஞ்ஞோர் போல்சாங் சுவாமியாரை அழைத்துச் சீனவிலே கத்தோலிக்க திருச்சபையின் பாப்பானவராகும்படி அவரைக்கேட்டு நின்ருர்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்குஇசைய அவர் மறுத்து, "திருச்சபை உலகமுழுவதுக்கும் ஒரேயொரு பாப்பானவரையே கொண்டிருக்க முடியுமென அழுத்தமாகக்கூறினர். பின்னர் சிறைச்சாலையில் இருந்துவரும் ஓர் குருவானவருக்கு இந்தப்பதவியை அளித்தார்கள். அவரும் அதனைஏற்க மறுத்துவிட்டார்.

### நாற்பத்தெட்டுப் புதுமைகள்

இத்தாலியிலே பீசாநகர சர்வகலாசாலையில் 40 வருடங்களுக்கு மேல் அரசியற்பொருளாதாரப் பேராசிரியராக விளங்கியிருந்தவரும், கத்தோலிக்க சமூகசீரமைப்புக்குழுவின் தலைவராயிருந்தவருமான கியுசெப்பி தோனியோலோ அவர்களின் சலிகையால் வைத்தியரீதியாக அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ள 48 புதுமைகள் நடந்திருப்பதாக மொன்சிஞ்ஞோர் அனிச்சினி சுவாமியார் அறிவித்திருக்கின்ருர். அவருக்கு முத்திப்பேறுபட்டம் அருளும்படி கேட்கும் விசாரணைத்தலைவர் இவரே. தொழிலாளரின்சாசனம்என்று உலகப்பிரசித்திபெற்ற "றேறும் நோவாறும்" என்ற நிருபத்தை எழுதப் பதின்மூன்ரும் சிங்கராய பாப்பானவருக்கு நம்பிக்கையுள்ள துணைவராய்இருந்துவந்தவர் இந்தப்பேராசிரியரான சுத்தவாளரே. இவர் 1918-ம் ஆண்டு பரமபதம் அடையலாயினர்.

---

## தகைசான்ற தமிழ்த்தூதர்

# அறிஞர் தனிநாயக அடிகள்

"யான் ஒரு சொற்பொழிவாளனே அன்றி ஒருஎழுத்தாளனே அல்லன். ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆர்வமிக்க தமிழ் மாணக்கனே ஆவன். எனவே, தமிழ்அறிவிற் சிறந்த பெரியோர்பலர் கூடிய இப்பேரவையில் உரை நிகழ்த்துவதற்கு—அதுவும் சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள் பற்றி உரைநிகழ்த்துவதற்கு அஞ்சுகிறேன்." யாழ்ப்பாணத்தமிழ்த் திருநாளில் அறிஞர் தனிநாயக அடிகள் இவ்வளவு அடக்கமான அவை அடக்கம் சொன்ஞர்கள் இது அவையடக்கந்தான், அவையடக்கமேயன்றி வேறல்லஎன்பதை அவர்தம் பேருரை வெகுவிரைவில் புலப்படுத்தியது.

தனிநாயகம் ஈழநாடு ஈன்ற எழிலார் கலைமணி. கண்டிநகரிலும், உரோமைமா நகரிலும் குருத்துவத்திற்குரிய கல்வி பயின்று வேதநூற்புலமை எய்திய தேசிகர். அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆராய்ச்சி நிகழ்த்தியவர். அதன்காரணமாக இலக்கிய வித்தகப்பட்டம் பெற்றவர். என்றும் இளையாத மாணவஆர்வம் நிரம்பிய பெரியபடிப்பாளி. தகைசான்ற தமிழ்த்தூதர்.

நம் இலக்கியத்தின் தொன்மைவாய்ந்த நூல்மரபாகத் தலைவி தலைவனுக்குத்தூது விடுப்பது அமைந்திருக்கின்றது. "ஓதல் பகையே தூது இவை பிரிவே" என்று தொல்காப்பியத்துள் தூதில்பிரிவு பிரிவுகளில்ஒன்ருகப் பேசப்படும். பிற்காலப் பதினெண்வகைச் சிறுநூல்களில் தூதுநூலும் ஒன்ருகும். அகத்துறையில் மயிலையும் குயிலையும், அன்னத்தையும் கிளியையும், வண்டினையும், தென்றலையும் தூதாகஅனுப்புவது மடவார்க்குஏற்றதே.

தமிழ்அன்னை விடுக்கும்தூது பிணங்கியதலைவனை நோக்கி அனுப்பப்படும் தூதல்ல. உலகமக்களுக்கு நம் கன்னிமொழியாள் அனுப்பும் உன்னத தூதன்ரே அது? அன்பர்பணி செய்ய நம்மைஆளாக்கி வைத்துவிடும் இன்பநலம் செறிந்த இனிய பெருந்தூதன்ரே அது? வாதுற்றும், பேதுற்றும் உருக்குலைந்து நிற்கும் மன்பதையை ஒரு குடும்பமாகக்கூட்டும் ஒற்றுமைத் தூதன்ரே அது? எம தன்னை—அறிவு தழைக்கத் தழைத்த தமிழ்அன்னை, தூதனுப்புகின்ருள்என்ருல் அவள் அஃறிணைப்புயிர்களையா தூதனுப்புவள்? தக்க சான்ரோரை அன்ரே தூதனுப்புவள். அச்சான்ரோர்குழுவில் இந்நாளில் நடுநாயகமாக விளங்குபவர் தனிநாயக அடிகள்.

அடிகள் 1949-50- இல் உலகஞ் சுற்றினர். கீழ்த்திசைநாடுகளிலும், மேல்திசைநாடுகளிலும் தமிழ்மொழியைப்பற்றியும், திராவிடக் கலையைப்பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றினர். ஐக்கியஅமெரிக்காவில் ஓராண்டில் தமிழைப்பற்றி இருநூறு விரிவுரைகள் நிகழ்த்தியிருக்கின்றனர். நியூயோர்க்கில்இருக்கும் மொழிப்பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் (Berlitz School of Languages) அடிகளை ஆசிரியராக அமர்ந்து பணியாற்ற விழைந்து கேட்டனர். பலவூர்களிலும் விரிவுரை யாற்றும் கடமைமேற்கொண்டிருந்தார்களாதலின் இப்பொறுப்பையும் ஏற்க அடிகள் இசைந்திலர். ஒருமுறை நியூயோக்நகர மேரிஞல் குருமடத்தில் சொற்பொழிவாற்றிய ஐந்து சர்வதேசபேச்சாளர்களில் அடிகளும ஒருவர்.

தமிழ்த்தூதாகிய சீரியசேவையின் தேவையையும், இன்றியமையாமையையும்பற்றி அடிகள் கூறுகின்ருர். "இத்தொண்டு இக்காலத்து இன்றியமையாதுவேண்டுமோவெனில், இன்றியமையாது வேண்டும். உலகமொழிகளின் பிறப்பைக் கண்டும், அவைசிதையவும் மாறவும் வழக்கொழியவும், தான் இன்றும் தன் இளங்கன்னித்தன்மையைக்காத்து வருகின்ற தமிழ்அன்னைக்கு இன்று இடுக்கணும் இடும்பையும் நேர்ந்துள. தமிழ் அன்னைமீது பல்வேறு பகைவர்கள் அறிந்தும் அறியாதும் படைஎடுத்துள்ளனர். இப்பகை எல்லாவற்றையும் புறங்

ஆர். எம்.—தாய் நாடு

காணும் கருவி தமிழ்த்தூதுமுரசின் ஒலி ஒன்றேஎன நம்புகிறேன்."

மேனுட்டு மொழியாராய்ச்சியாளரும் இலக்கிய ஆராய்ச்சியாளரும் இந்தியப்பண்பினை அறிதற்கு வடமொழிஇலக்கியப் பயிற்சியே சாலும எனக்கூறுவது பொருந்தாக் கூற்றுஎன்பது அடிகளாரின் கருத்து. தமிழ்க்கலையின் தனித்தன்மையை மேனுட்டார் உணராதது ஒரு பெருங்குறைஎன அடிகள் அறைகூவுகின்றனர். இந்தியநாட்டில் இந்தியக்கலைஞரால் எழுதப்பெற்ற இலக்கிய வரலாற்று நூல்களிலே தமிழுக்குத் தகுந்தஇடமும், புகழும் அளிக்கப்படவில்லை என்று அவர்கள் குறைகூறுவதில் முறையுண்டு.

வெறுங்குறை சொல்லி வாளாவிருக்கவில்லை. ஆக்கவழிகள் சில வகுத்துக்காட்டுகின்ருர். கழகரீதியாகச் செயலாற்றமுனைகின்ருர். அவர்கள் கூறும் சில "வேண்டும்" கள்.

1. ஹோமரின் ஒடிசையையும், வெர்ஜிலின் இனியதையும் மக்கள் போற்றுவதுபோல் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தையும் உலகம் போற்றுமாறுசெய்யவேண்டும்.

2. கொன்பூசியஸ், செனக்கா முதலாய நீதிநூல் ஆசிரியர்களை உலகமாந்தர் எங்ஙனம் அறிந்து படிக்கின்றனரோ அங்ஙனமே திருவள்ளுவரையும் அவர்கள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கிய சங்கம்

யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கியசங்க அங்கத்தவர்களின் பொதுக்கூட்டம்ஒன்று நிகழும் பங்குனிமாதம் 2-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்திலே "கதலிக் கிளப்" மண்டபத்தில் நடந்தேறும்.

விசாரணைப்பங்குகளின் பிரதிநிதிகள் விசேஷவிதமாக அழைக்கப்படுகிறார்கள்.

கூட்டத்தின் நோக்கங்கள் வருமாறு:—

1. நிர்வாகசபையைத்தெரிவு செய்தல்
2. மேற்றிராசன ஐக்கிய சங்க நலன்களின் விருத்திக்கான வழிவகைகளைப் பற்றிக் கலந்து ஆலோசித்தல்

H. லெக்குத்தூர், O.M.I.
விக்கார் ஜெனறல்,
ஞானத்தலைவர்.

மேற்றிராணியாரின் மாளிகை
யாழ்ப்பாணம்
6– 2– 52

## திருநாள் அட்டவணை

மாசிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 8 | அ. மாத்த அருளப்பர் | (வெ) |
| சனி | 9 | அ. அலெக். சிறிலப்பர் | (ப) |
| ஞா | 10 | சத்திரிகை — அ. ஸ்கொலாஸ்திக்கா | (ஊ) |
| திங் | 11 | அ. லூர்துமாதாதிருநாள் | (வெ) |
| செ | 12 | அ. எவுலாலியம்மாள் | (வெ) |
| புத | 13 | அ. மர்த்தினியானுர் | (ஊ) |
| வி | 14 | அ. வலென்ரினுர் | (சி) |

சத்தியவேத
பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
மாசிமாதம் 7-ந் திகதி

## அரசபெருமானின் மறைவு

எலிசபேத் இளவரசியும், அவர் நாயகரான எடின்பறோ கோமகனும் சாம்பிராச்சிய நாடுகளிலே முப்பதினாயிரம் மைல்தூரமான தங்கள் சுற்றுப்பிரயாணத்தை நடத்துவதற்காகச் சென்ற 31-ந் திகதி வியாழக்கிழமை லண்டன் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்கள். ஐந்துமாத காலத்துக்கு மேல் நீடிக்கவிருந்த தங்கள் சுற்றுப்பிரயாணத்தின் முதற்பகுதியை ஆரம்பிப்பதற்காக அன்றுதினம் அவர்கள் "அற்லான்ரா" எனும் விமானத்தில் புறப்படும்போது அரசரும், அரசியும், மார்கறெற் இளவரசியும், பிரதமர் வின்ஸ்றன் சேர்ச்சில் அவர்களும் உட்படப் பெருந்திரளானோர் விமானநிலயத்தில் குழுமியிருந்து அவர்களைப் பயணமனுப்பிவைத்தார்கள். அவர்கள் இலங்கைக்கு வரும் வழியிலே ஆபிரிக்காவில் கெனியாநாட்டில் ஒருவாரம் சுற்றுப்பிரயாணம் நடத்தியதன்மேல் மொம்பசாத் துறைமுகத்தில் வந்துகாத்துநின்ற "எஸ்.எஸ். கோதிக்" எனும் கப்பலிலே இலங்கையைநோக்கி இன்று புறப்படவிருந்தார்கள். பிரித்தானிய பட்டத்து இளவரசி என்றமட்டிலும், ஓர்காலம் அரசியாக முடிசூடி அரசசிம்மாசனமேறவிருப்பவர் என்றமட்டிலும் இளவரசியை அவர்நாயகருடன் இனிதே ஆடம்பரமாகவரவேற்பதற்கென்று ஸ்ரீலங்காவும் பெருமித ஆயத்தமெல்லாம் செய்துகொண்டிருக்கும்போது, அவர் தந்தையாரான ஆறுவது ஜோர்ஜ் அரசபெருமான நேற்றையதினம அம்மம்ம! எதிர்பாராதவிதமாய் மரணத்திரையுள் மறைந்தாரெனும் அமங்கலசெய்திபரந்து அகிலமுழுவதும் கவலையென்னும்கார்மேகம் கவியலாயிற்று.

## மிஷனரிமாரும் * * பௌத்த குருவும்

பிறநாடுகளிலே கிறீஸ்துசமயத்தைப் போதிப்பதற்கென்றும், போதித்து மற்றவர்களையும் கிறீஸ்து பெருமானின் பக்தர்கள் ஆக்குவதற்கென்றும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலிருந்து கிறீஸ்துவ மிஷனரிமார்கள் காலந்தோறும் அனுப்பப்படுகின்றார்கள். அவர்களும்சென்று அருந்தியாகங்கள்செய்து, கிறீஸ்துபெருமானை அறிபவராதமக்கள் லட்சக்கணக்கிலே — கோடிக்கணக்கிலே வசிக்கும் அந்நாடுகளிலே அவரையும், அவர்ஏற்படுத்திய அருமறையையும் பற்றிப் போதகஞ்செய்தும், அவர்கள்மத்தியிலே கல்விச்சாலைகள், வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள், அநாதசாலைகள், வயோதிகர்சாலைகள், குஷ்டரோகர்சாலைகள் ஆதியவற்றை ஸ்தாபித்துச் சமயதொண்டுகளுடன் சமூகதொண்டுகள்செய்தும் பெரும்பணிகள் ஆற்றிவருவது உலகமறிந்ததே. இந்தக் கிறீஸ்துவ மிஷனரிமார்கள் ஆற்றிவருகின்ற போற்றத்தக்க சேவைகளையும், அடைந்துவருகின்ற புகழ்ச்சிக்குரிய அனுகூலங்களையும்கண்டு ஆச்சரியவசத்தராகும் புத்தசமய தலைவர்கள்சிலர் அவர்களைத் தாங்களும் கண்டுபாவித்துப் பிற நாடுகளுக்குப் புத்த மிஷனரிமார்களை அனுப்பவும், அந்நாடுகளிலுள்ளமக்களைப் புத்தர்களாக மனந்திருப்பவும் ஆர்வம் காண்பித்ததுண்டு. இரண்டொருபுத்தமிஷன்களை அவ்வப்போது அனுப்பியதுமுண்டு. அதிகமாக இன்னும் அனுப்பிவைக்கவேண்டுமென்று முயற்சியெடுப்பதுமுண்டு. இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன?

கிறீஸ்துவ மிஷனரிமார்கள் கிறீஸ்துபெருமானுக்காக—அவரது திருமறையைப் பரப்புவதற்காகத் தங்கள்உயிரையே திரணமாகமதித்து, அயராதுழைத்து வருவதைக் காணும்போது, தங்கள்சமயத்தையும் அவர்களைப் போலப் பரப்பவேண்டுமென்ற ஓர்அபிமானம் இவர்களுக்கும் பிறக்கும் அல்லவா? இதுதான் அவற்றிற்கெல்லாம் காரணம். ஆதலால் இவர்களைச் சமயதொண்டிலே தட்டியெழுப்பிவிடுகின்ற கிறீஸ்துவ மிஷனரிமார்களை நயந்து பாராட்டுவதற்குப்பதில் அவர்களைச் சினந்து எதிர்ப்பதும், அவர்கள்பால் தங்கள் சமயத்தவரிடையே துவேஷத்தை எழுப்புவதும் ஆற்றாதவர்களின் செயல்களேயாம். இந்தப்போக்கிலே இலங்கையில் இன்றுமுன்னணியில் நிற்பாருள் ஒருவர் பேராசிரியர் ஜி. மலலசேகர என்பவர். இவர் அன்று இரத்தினபுரியில் பேசியபோது: கிறீஸ்துவ மிஷனரிமார்களிலே இல்லாத குற்றச்சாட்டுகளைஎல்லாம் சுமத்தியதிலிருந்து, அவர் பேச்சைக் கேட்டிருந்த புத்த சமய மக்களிடையே எத்தகைய உணர்ச்சிவேகம் பிறந்திருக்குமென்று சொல்லவேண்டியதில்லை. அம்பலாங்கொடையிலும் அன்றுஇவர் கம்யூனிஸ்தர்இட்ட வலையில் சிக்குண்டு, 1948-ம் ஆண்டு வெளியான "கதலிக் டைஜெஸ்ற்" எனும் அமெரிக்க கத்தோலிக்க சஞ்சிகையில் கண்டபடத்தைப்பற்றி ஆட்சேபிக்குமுகமாக இவரும் இவரது சகாக்களும் பேசியவைகள் இலங்கையின் அமைதிக்கு எத்துணைபெரும் பங்கம் விளைக்கக்கூடியன என்பதை இதுவரையிலே இவர் நன்றாக உணர்ந்திருப்பார்போலும்.

திரு. மலலசேகர போன்றோர் எவ்வாறு பேசியபோதிலும் நிதானபுத்திபடைத்த புத்த பெரியார்களும் இல்லாமல் இல்லை. மக்கோனவிலே கலவிலாப் புத்தஇளைஞர்சங்க கூட்டத்தில் சென்ற வியாழக்கிழமை கனம். பாத்பீரியே இந்தானந்த எனும் புத்தகுருபேசியது இவர்களுக்கெல்லாம் நன்மதிபுகட்ட வல்லதாகும். அதாவது:

"கிறீஸ்தவர்களைக் கண்டனஞ்செய்வதாலும், அவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவதாலும் புத்தசமயிகளுக்கோ அன்றேல் புத்த சமயத்திற்கோ யாதாமோர் நன்மையும் ஏற்படப் போவதில்லை. தங்கள் தேவைகளுக்குத் தகுதியுடையோராக மக்களை ஆக்குவதற்காகவே பிரித்தானிய அரசும், மற்றும் பிற நாடுகளின் அரசாங்கங்களும் நாட்டின் கல்வியைக் கிறீஸ்துவ மிஷனரிமார்களிடம் கையளித்தன. இந்த நாட்டிலே கிறீஸ்துவ மிஷனரிமார்கள் ஆற்றியுள்ள நன்மைகளையிட்டு அவர்களை நான் பாராட்டுகிறேன். செவிடர் — குருடர் பாடசாலைகளும், வயோதிகர்சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டமை அவர்களது முயற்சிகளாலேயாகும். ஆனல், புத்தர்கள் இந்தவகையில் யாதொன்றுமே செய்யவில்லை." முன்சொன்ன புத்தகுரு இவ்வாறு பேசியிருக்க, பேராசிரியர் மலலசேகர யாது கூறுகின்றார்? புத்த சமயத்தைப் பரப்புவதற்கும், பாதுகாப்பதற்கும், பரிபாலிப்பதற்கும் அரசாங்கத்தின் உதவியைக்கோருகின்றோம்; ஏனெனில், இது புத்தநாடு; புத்தஅரசாங்கம் என நிற்கின்றார். அரசியலிலே சமயத்தைப் புகுத்துவதால் ஏற்படக்கூடிய பேரபாயத்தைப்பற்றிப் பண்டிதர் நேரு முதலாம் அரசியல் ஞானிகள் கூறுவது இவர்செவிகளுக்கு இன்னுமே எட்டவில்லைப் போலும்.

## தபசுகாலத்துக்கு முன்வரும் 3-ம் ஞாயிறு

(சத்திரிகை ஞாயிறு)

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 20: 1—16)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களைநோக்கிச் சொன்ன உவமையாவது: பரலோக இராச்சியம் தனது கொடிமுந்திரித் தோட்டத்துக்குக் கூலியாட்களை அமர்த்துவதற்காக அதிகாலையிற் புறப்பட்டுப்போன குடும்பத்தெசமானுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் கூலியாட்களோடு நாளொன்றுக்கு ஒருதெனியர் என்னும் நாணயங் கொடுக்க ஒப்பந்தஞ்செய்து, தனது கொடிமுந்திரித் தோட்டத்துக்கு அவர்களை அனுப்பினன். ஏறக்குறைய மூன்றுமணிநேரத்திலும் அவன் வெளியேபோய், பொது இடத்தில் வேலையற்று நின்றுகொண்டிருந்த வேறுசிலரைக்கண்டு: நீங்களும் என் கொடிமுந்திரித் தோட்டத்துக்குப்போங்கள்; நியாயமானபடி உங்களுக்குக் கூலிகொடுப்பேனென்று அவர்களுக்குச்சொன்னன். ஆதலால், அவர்கள் அவ்விடமபோனர்கள். அவன் ஆறும், ஒன்பதாமணிவேளைகளிலும் மறுபடியும் புறப்பட்டுப்போய் அவ்விதமே செய்தான். ஏறக்குறைய பதினேராமணிநேரத்திலும் இன்னமும் வெளியேபோய், நின்றுகொண்டிருந்த மற்றச்சிலரையுங்கண்டு: நீங்கள் வேலைசெய்யாமல் சோம்பலாய் நாள்முழுதும் இங்கே நிற்பானேனென்று அவர்களைக் கேட்டான். அவர்களோ: எங்களை யாரும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளாததினல்தான் என்று அவனுக்குச்சொல்ல, அவன்: நீங்களும் என் கொடிமுந்திரித் தோட்டத்துக்குப் போங்களென்று அவர்களுக்குக்கூறினன். பொழுதுபோனதும், கொடிமுந்திரித் தோட்டத்தின் எசமான் தன்காரியக்காரனை நோக்கி: வேலையாட்களை வரவழைத்துக் கடைசியில்வந்தவர்கள்துவக்கி, முதல்வந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலி கொடு என்றான். ஆதலால், ஏறக்குறைய பதினேராமணிக்கு வந்தவர்கள் முறைவந்தபோது அவர்களும் ஒவ்வொரு தெனியர் பெற்றார்கள். அப்போது முந்திவந்தவர்களும் அணுகித் தாங்கள் அதிகமாய்ப்பெற்றுக் கொள்ளப்போவதாக எண்ணினர்கள். ஆயினும், அவர்களும் ஒவ்வொரு தெனியர்தான் வாங்கினர்கள். அதை வாங்குகையில் குடும்பத்தெசமான் பேரில்முறையிட்டு: கடைசியில் வந்தவர்களாகிய இவர்கள் ஒருமணிநேரம் மாத்திரம் வேலைசெய்திருந்தும், பகற்பாரத்தையும், வெய்யில் அகோரத்தையும் சுமந்தவர்களாகிய எங்களோடு இவர்களையும் சரிசமானமாக்கினீரே என்றார்கள். அவனே அவர்களில் ஒருவனைநோக்கி மறுமொழியாக: நண்பனே, நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை; நீ என்னேடு ஒத்துக்கொண்டது ஒரு தெனியர் அல்லவோ? உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடையதை நீ எடுத்துப்போ; உனக்குக் கொடுத்ததுபோல் கடைசியில்வந்த இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். அல்லது நான் விரும்புகிறதைச் செய்ய எனக்குச் சுதந்தரமில்லையோ? அல்லது நான் நல்லவனுயிருக்கிறபடியால் உன் கண்கெட்டதோவென்றான். இவ்வண்ணமே கடைசியானவர்கள் முதலானவர்களாகவும், முதலானவர்கள் கடைசியானவர்களாகவும் இருப்பார்கள். ஏனெனில், அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பப்பேராயிருக்கிறார்கள் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சுதேச வர்த்தமானம்

### புதிய சேனற்றர்

காலஞ்சென்ற டக்றர் பிறுங்க் குணசேகா அவர்களிடமாகச் செனற்சபைப் புதியஅங்கத்தவராக இலங்கைச் சர்வகலாசாலையிலே வைத்தியசாஸ்திர கலாசங்க அதிபரான டக்றர் நிக்கல்ஸ் அற்றிக்கலே அவர்கள் தெரியப்பெற்றிருக்கின்றார்.

### கூப்பன் புத்தகங்கள்

தங்கள் கூப்பன்புத்தகங்களைக் கவலையீனத்தினால் இழந்துவிடுகிறவர்கள்மீது கடுமையானநடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் முடிவுசெய்துள்ளனர். அடுத்த பங்குனிமாத ஆரம்பத்திற்கு முன் கூப்பன்புத்தகங்களைத் தொலைத்தவர்களுக்கு வருகிறஆனிமாதம் புதுக் கூப்பன்புத்தகங்கள் கொடுக்கப்படுகிறவரையிலே மாற்றுப்புத்தகம் வழங்கப்படமாட்டாது. அடுத்த பங்குனி மாதத்திற்கும், வருகிற ஆனிமாதத்திற்குமிடையிலே அவைகளைத் தொலைத்துவிட்டதாக அறிவிப்பவர்களுக்கு 1953-ம்வருட ஆரம்பம்வரையில் மாற்றுப்புத்தகம் வழங்கப்படமாட்டாது. புத்தகங்கள் சேதமடைந்தால் மட்டும் மாற்றுப்புத்தகங்கள் வழங்குவதுபற்றி ஏதாவது கவனிக்கப்படும்.

### புத்தகப் பொருட்காட்சி

சம்பத்திரிசியார் கல்லூரியிலே நாளை நின்றுவரும் 9-ந் திகதிசனிக்கிழமை புத்தகப்பொருட்காட்சி ஒன்று நடந்தேறவிருக்கிறது. இக்காட்சியிலே ஆங்கிலபோதனை, ஆங்கிலமூலம் ஏனைய பாடங்கள் போதித்தல்பற்றிய சுமார் 400 புத்தகங்களும், கல்வியூட்டுவதற்கு உதவக்கூடிய சிலசாதனங்களும் வைக்கப்பட்டிருக்கும். அன்றுமாலை சினிமாப்படம் காட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இக்காட்சி ஆசிரியர்களுக்கென்றே முக்கியமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### விளையாட்டுப் போட்டி

புங்குடுதீவுக் கிராமமுன்னேற்ற சங்கப்பகுதியில் சுதந்திரதின விழாவையொட்டி இம்மாதம் 4-ந் திகதி நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றிய எல்லாப்பாடசாலைகளிலும் புங்குடுதீவு அர்ச். சவேரியார் பாடசாலையே அதிகங்கூடுதலான புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தை வகித்ததோடு, அப்பகுதிக்குரிய கிண்ணப்பரிசிலையும் பெற்றுக்கொண்டது. இதுவே இப்பாடசாலை தனது சரித்திரத்தில்பெற்ற முதற்பெரிய வெற்றியாகும்.

### அக்குறேசா இடைத்தேர்தல்

திரு. டபிள்யு. பி. ஏ. விக்கிரமசிங்க காலஞ்சென்றமையாலே பாராளுமன்றத்தில் காலியாகவிருக்கும் அக்குறெசாஸ்தானத்துக்கு அபேட்சகராக யு. என். பி. கட்சி திரு. ஜே. எஸ். டி. சில்வா அவர்களைத் தெரிவுசெய்திருக்கிறது.

## ஸ்ரீ C. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

அச்சுவேலி வாசராய், காலங்கண்ட ஓர் மனுஷராய், தேவபக்தி குருபக்தியில் சிறந்தவராய் விளங்கியிருந்தவரான ஸ்ரீ கொன்ஸ்தந்தீன் வஸ்தியாம்பிள்ளை அவர்கள் விருத்தாப்பிய நோய் கண்டிருந்து சென்ற 27-1-52 ஞாயிற்றுக்கிழமை மரணத் திரையில் மறைந்த துயர செய்தியானது பலருக்குமே மிகுந்த கவலையைத் தரலாயிற்று. மரிக்கும்போது இவருக்கு வயது 89.

இவர் இருமரபும் துய்யராய், தமது தந்தையாரின் மைத்துனராகப் பெரும் புகழும் படைத்திருந்த மானியம்பதி திரு. சிற்றம்பலம் காடினர் அவர்களின் இரண்டாவது புதல்வியான செல்லம் எனும் நல்லாளை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இல்வாழ்க்கை இனிதே நடத்திவரலாயினர். அவவும், அவவின் மூத்த சகோதரியான நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசியாருடைய தாயாரும் அச்சுவேலியில் விவாகஞ் செய்தபின் இப்பதியானது பெரிதும் மறுமலர்ச்சி அடையலாயிற்று.

நிற்க, காலஞ்சென்ற பெரியார் இந்த அநித்திய உலகின் அழிந்துபோகும் செல்வத்தைச் சம்பாதிக்கவில்லை. ஆனால், நித்தியத்துக்கும் நிலைப்பதும், பரலோக சம்பாவனையை அளிப்பதுமான திரவிய சம்பத்தை ஏராளமாகச் சம்பாதிப்பதிலேயே என்றைக்கும் கருத்தாயிருந்து வந்தார். அதனால் தம்முடைய உத்தம கிறீஸ்துவ சீவியத்தாலே தமது அரியமக்களுக்கும், சுற்றத்தவர்களுக்கும், தம்மை அறிந்த சகலருக்கும் சிறந்த ஓர் மேல்வரிச்சட்டமாய், குணக்குன்றாய் விளங்கி எவருடனும் மிக அன்பாகவும், சாந்தமாகவும் நடந்துவந்தார். இவரின் புத்திரரத்தினங்களுள் தற்போது யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலமாதா கோவிற் கட்டளைக் குரவராகும் விவேகமும், கல்விசாதுரியமும், புனிதமுமிக்கரான வண. B. வில்லியம் யேசுதாசன் சுவாமியவர்களும் ஒருவர். மற்றொருவர், யாழ்ப்பாணக் கச்சேரியிலே உத்தியோகம் வகித்திருக்கின்ற திரு. B. T. இராசநாயகம் அவர்கள்.

இவரின் பிரேத சேமமானது, மறுநாள் சாயந்தரம் முப்பத்தொரு குருமார் புடைசூழ்ந்து துக்கசங்கீதம் பாடிநிற்க, பலவிடங்களிலுமிருந்து வந்து கூடிய உறவினர் சிநேகிதர் அனுதாபந் தெரிவித்து நிற்க, வண. B. A. ஜோண் றெக்ரர் சுவாமியவர்களையும், வண. J. நீக்கொலாஸ் மூப்புசுவாமியவர்களையும் துணையாகக்கொண்டு குருபுதல்வரான சுவாமியவர்கள் அந்திம திருச்சடங்குகளை நிறைவேற்றிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கச் சகல வரிசைகளுடனும் சிறப்பாக நடந்தேறியது. இவரை இழந்து துன்புறும் புத்திரர், புத்திரிகள், மற்றுமுள்ள இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

### கடுதாசித் தொழிற்சாலை

வாழைச்சேனையிலே அமைக்கப்படவிருக்கும் கடுதாசித் தொழிற்சாலைக்கென்று 40 லட்சம்ரூபா பெறுமதியுள்ள யந்திரசாதனங்கள் ஜேர்மனியிலிருந்து சமீபத்திலே கொழும்புவந்து சேரவிருக்கின்றன. இந்தயந்திரங்களை ஜேர்மனிய யந்திரசாஸ்திரி ஒருவர் பொருத்திவைப்பார். தொழிற்சாலையில் கடமைபார்க்கும் பிரதானஉத்தியோகஸ்தர்களின் இல்லங்களை அமைக்கும்வேலை தற்போது நடைபெற்றுவருகிறது. அடுத்தவருடத்தின் முற்பகுதியிலே கடுதாசிஉற்பத்தி ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது. எழுத்துக்குரியகடுதாசியே முதலில் உற்பத்திசெய்யப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம், சிறுத்தீவு

## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

## 11 — 2 — 52.

இத்திருநாளுக்கு ஆயத்தமாக மாசிமாதம் 8-ந் திகதி வெள்ளி, சனிக்கிழமைகளில் பி. ப. 5-30 மணியளவில் செபமாலை, பிரார்த்தனை முதலிய பத்திமுயற்சிகள் நடைபெற்று ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் (வேஸ்பர்) மாலை ஆராதனைபாடி மெழுகுவர்த்தித் தீபாலங்காரத்துடன் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணியளவில் திருநாட்பூசையும், அதன் முடிவில் அன்னதானமும் வழங்கப்படும்.

E. POMYKOL, O. M. I.
கட்டளைக்குரவர்.

## பருத்தித்துறை தும்பளை பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

மாசிமாதம் 11-ந் திகதி

இத்திருநாளுக்கு ஆயத்தமாக மாசிமாதம் 1-ந் திகதி சாயந்தரம் 6 மணிக்கு நோவனை தொடங்கும்

நிகழ்ச்சிகள் :—

[1] மாசிமாதம் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு மெழுகுவர்த்தித் தீபஅலங்காரச் சுற்றுப் பிரகாரம்.

[2] பிற்பகல் 7 மணிக்குப் பிரசங்கம்.

[3] பிற்பகல் 7-30 மணிக்கு மகாவந். மேற்றிராணி ஆண்டவர்அவர்களால் வேஸ்பர் ஆராதனை — தேவநற்கருணை ஆசீர்வாதம்.

[4] 11-ந் திகதி காலை 7 மணிக்குப் பாடற்பூசை.

☞ திருக்கோபியில் யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு.

மகாவந். மேற்றிராணியாண்டவர் சமுகமளிப்பார்.

கட்டளைக்குரவர்

## மாதகல் துறை பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

இவ்வருஷம் பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள் மாசிமாதம் 5-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 17-ந் திகதி காலை அதிசிறப்பாக முடிவாதும்

16-ந் திகதி சாயந்தரம் 7 மணியளவில் பரிசுத்த லூர்துநாயகியின் திருச்சுரூபம் சென் தோமஸ் ஆலயத்திலிருந்து ஆடம்பர வைபவங்களுடன் மெழுகுவர்த்தித் தீபஅலங்கார சுற்றுப்பிரகாரமாகத் திருக்கோபி செல்ல, அங்கே மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் வேஸ்பரென்னும் மாலையாராதனை பாடப்பெற்றுச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படும்.

(யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு.)

கட்டளைக் குரவர், மாதகல்.

### ஓர் ஸ்தானம் மட்டுமாம்

மாஜி சுகாதார-தலதாபன மந்திரியார் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகஅவர்கள் சமீபத்திலே பண்டாரவளையில் பேசியபோது, அடுத்த தேர்தலிலே ஊவாமாகாணத்தில் யு.என்.பி. கட்சி ஒரேயொரு ஸ்தானத்தையே வெற்றிகொள்ளுமெனக் கூறியிருந்தார். ஆனால், பிந்தப் பண்டாரவளைப் பிரிவின் யு. என். பி. வாலிப சமாஜ ஆரம்பகூட்டத்திலே பண்டாரவளைப் பட்டினசங்கதலைவர் ஏ. எஸ். பசனுயக அவர்கள் பேசியபோது : ஊவாமாகாணத்திலுள்ள ஏழுதொகுதிகளும் திரு. பண்டாரநாயகாவின் கையில்தான் இருக்கிறதோ? சரி, யு. என். பி. ஒருஸ்தானத்தைத்தான் வெற்றிகொள்ளுகிறதோ, இருந்துபார்ப்போமெனக் கூறி, இடதுசாரிகளின் பிரசாரத்தால் வழிதவறிப்போகாதிருக்கும்படி சகலரையும் எச்சரித்து, நாட்டிலேகம்யூனிஸத்தை எதிர்த்துப்போராடத் துணைச் செய்யுமாறு சனநாயகத்தை நேசிக்கின்ற எல்லோருக்கும் மனுப்பண்ணிக்கொண்டார்.

### வீரச் சிறு குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகும். இப்புண்ணியத்தைப் பற்றி அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு கூறியுள்ள வார்த்தைகள் சிந்தனைக்குரியனவாகும். (1. கொரி. 13,14. அத்.)

(தொடரும்)

### ஐம்பதினுயிரம்தோன் அரிசி

நமதுஅரசினர் வியற்னும்அரசாங்கத்துடன் செய்திருக்கும் ஓர் அரிசி ஒப்பந்தத்தின்படி நிகழும் 1952-ம் ஆண்டிலே அங்கிருந்து இலங்கைக்கு ஐம்பதினுயிரம்தொன் அரிசி கிடைக்கவிருக்கிறது. வியற்னுமிலிருந்து இலங்கைக்கு அரிசி கிடைக்கப்போவது இதுவே முதன்முறையாகும். இந்த அரிசியின்மாதிரியைப் பரிசோதனை செய்த அதிகாரிகள் அது நல்லஇன அரிசியென்று கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா ?

—:—

**1. எந்தக் கடல்யுத்தத்தில் அடைந்துகோண்ட வெற்றிக்கு நன்றியறிதலாகப் பரிசுத்த செபமாலைத் திருநாள் ஏற்படுத்தப்பட்டது?**

1571-ம் ஆண்டு லெபான்ரோ எனுமிடத்தில் நிகழ்ந்த கடல்யுத்தத்தில் அடைந்துகொண்ட வெற்றிக்கு நன்றியறிதலாகவே பரிசுத்த செபமாலைத் திருநாள் ஏற்படுத்தப்பட்டது. அந்த யுத்தத்திலே பாப்பரசின் கடற்படையும், ஜெனேசிய, வெனிசிய, ஸ்பானிய கடற் படைகளும் ஆஸ்திரியாவைச் சேர்ந்த தொன்ஜோண் என்பவரது தலைமையின் கீழ் மேற்கு ஐரோப்பாவை அடிப்படுத்தப்போவதாக அச்சுறுத்திநின்ற துருக்கியர்களைத் தோற்கடித்தன.

**2. பிரான்சீஸ்குவின் கிரீடம் என்றல் என்ன ?**

தேவதாயாரின் ஏழு சந்தோஷங்களுக்கும் தோத்திரமாக ஏழு காரணிக்கங்களைக்கொண்ட ஓர் செபமாலையாகும். இது அதிதூதருக்குரிய செபமாலையென்றும் அறியப்படுகின்றது.

**3. கத்தோலிக்க சமயசம்பந்தமான புத்தகங்களின் தொடக்கத்திலே "இம்பிறிமாத்துர்" (அனுமதி பெற்றது) (Imprimatur) "நிஹில் ஒப்ஸ்ராத்" (விக்கினம் இல்லை) (Nihil Obstat) என்னும் வார்த்தைகள் இருக்கப் பலமுறையும் கவனித்திருக்கிறீர்கள் அல்லவா? ஆனல், அவைகள் ஏன் அங்கு இருக்கின்றன என்பதை அறிவீர்களா ?**

அப்படிப்பட்ட புத்தகங்கள் பிரசுரஞ் செய்யப்படுமுன் திருச்சபை அதிகாரிஒருவரால் பிழை சரி பார்க்கப்பட வேண்டுமென்று திருச்சபைச் சட்டம் கற்பிக்கின்றது. ஆகவே, நீங்கள் ஒருபுத்தகத்தில் இந்தவார்த்தைகளைக் காணும்போது, அதிலே வேதவிசுவாசத்துக்கோ அல்லது சன்மார்க்கத்துக்கோ விரோதமான அல்லது கெடுதியான எதுவுமில்லை யென்பதை அவைகள் கருதுகின்றன. ஆனல், அவ்விதம் சரிபிழை பார்ப்பது உள்ளபடியே எல்லாப்புத்தகங்களுக்கும் அவசியமன்று. பரிசுத்த சுவிசேஷம், கனன்சட்டம், வேதசாஸ்திரம், பத்திக்குரிய புத்தகங்கள், சமயத்துடனும், சன்மார்க்கத்துடனும் விசேஷமாகச் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் ஆதியவற்றில்மாத்திரமே இது அவசியமானதாகும்.

**4. திரிகாலச் சேபம் சோல்லும் வழக்கம் எப்போது ஆரம்பமானது?**

1263-ம் ஆண்டு பிரான்சீஸ்கன் சபையாரால் ஆரம்பமானது.

**5. விக்கார் ஜேனறல் என்றல் யார் ?**

தமது மேற்றிராசனத்தை ஆளுகை செய்வதில் தமக்கு உதவியாக மேற்றிராணியார் நியமனஞ்செய்யும் ஓர் குருவானவரே.

**6. ஆதாம் கேட்டது முதல் மேசியா என்னும் இரட்சகரின் வருகை ஈறகவுள்ளகாலம் எத்தனையாக வகுக்கப்பட்டிருக்கிறது?**

இயல்வேத காலம், வரிவேதகாலமென இரண்டாக வகுக்கப்பட்டிருக்கிறது.

**7. இயல்வேத காலம் என்றல் எது ?**

சுபாவ கற்பனைகளாலும், சர்வேசுரனால் வெளிப்படுத்தப்பட்டுத் தலைமுறையாக வாயினாலே பாரம்பரைபாரம்பரையாகத் தெரிவிக்கப்பட்டுவந்த சில திட்டமான கற்பனைகளாலும் மனிதர் ஆளப்பட்டிருந்த காலமாகும். இது ஆதித்தகப்பன் பாவத்தைக் கட்டிக்கொண்டதுமுதல் சர்வேசுரன் மோசேஸ் மூலமாகத் தமது சனத்திற்குப் பிரமாணத்தைக் கொடுத்ததுவரையில் உள்ளது.

---

பண்டத்தரிப்பு,
ஸ்ரீமான் M. C. தம்பிப்பிள்ளை
அவர்கள்

## தேகவியோகம் பற்றிப் பாடியவை.

—:—

விருத்தம்—பஞ்சகம்

1

சீர்மலியும் யாழ்ப்பாண
நாட்டின் கண்ணே
திருத்தங்கும் பொற்பண்டத்
தரிப்பில் வந்து
பார்மலியும் நற்பாஇலங்கைபாகு
முதலி வம்சம்
பரிமளிக்கச் செய்தெழுபான்
ஆண்டு வாழ்ந்து
பேர்மலியும் பணிகாட்டிப்
பெருமை யீட்டிப்
பெரிதளித்த ஓவசியர்
தம்பிப் பிள்ளை
நீர்மலியக் கண்ணிருந்தே
நினைந்து நெஞ்சம்
நெக்குருக எமைவிடுத்து
நீங்கி னரே.

2

எண்ணுக்குள் அடங்காத
வரங்கள் அள்ளி
ஈந்தருளும் பாத்திமத்தா
யினிய பக்தி
பண்ணுக்குள் அடங்காத
கனிந்த சொல்லாற்
பதுமமுகம் மலர்ந்தளிக்கும்
பான்மை யென்றுங்
கண்ணுக்குள் இருந்துநடம்
புரிந்தே யாடுங்
காட்சியெலாங் கனவெனவே
யாக நீர்தாம்
மண்ணுக்குள் மறைந்ததுயர்
ஆற்றேம்! ஆற்றேம்!
மனமாற வழியின்றி
மயங்கி னேமே.

3

நல்லறமாம் இல்லறநற்
தேரைப் பூட்டி
ஞானமெனும் நற்பாதை
நடந்து மேன்மை
சொல்லறமாம் துறவறத்தில்
முதலிற் பூத்த
சுகுணமலர் தனைவிடுத்த
தூய்மை சொல்கோ!
பல்விதமாய்ப் பாராட்டும்
கல்வி தன்னைப்
பாடறிந்து கற்பித்த
பான்மை சொல்கோ!
நல்லிதய மருமக்கள்
தம்மைத் தேடி
நயந்தளித்த சிறப்பதனை
நாடிச் சொல்கோ!

4

எத்திக்கும் பக்தியனல்
மூட்டுங் கோவில்
ஏறெடுத்துப் பார்க்கவொண்ணுக்
கோபு ரங்கள்
தித்திக்கும் கன்னியர்தம்
மடங்கள் எல்லாம்
செங்கரத்தின் இங்கிதத்தைக்
கண்டு கண்டு
புத்திக்கும் எட்டாத
புகழைப் பாடப்
பூசைக்குப் போய்வழியில்
ஆவி போன
சித்திரத்தை யென்னென்பேம்
தேவ தேவன்
சேவைசெய்ய ஆவலுடன்
சென்றிட் டீரோ.

5

கற்றறிந்த உலகமெலாம்
கனிந்து பாடும்
கான்முளையார் மருமக்கள்
கடல்போ லுற்ற
சுற்றமெலாம் நெட்டுயிர்த்துச்
சொல்ல வொண்ணுச்
சோகமெனுஞ் சாகரத்தில்
மூழ்கு முழுக
நற்றவஞ்சேர் ஓவசியர்
தம்பிப் பிள்ளை
நமக்குமுன்னே நடந்துசொன்றார்
நாமும் பின்னே
பற்றகன்ற பரம்பொருளின்
பாதஞ் சேரும்
பான்மைதனை யெண்ணிமனம்
தேறு வாழ்வேம்.

"ஞானி"

---

## பொதுவர்த்தமானம்

### இரத்த அமுக்கநோய்

கூடிய இரத்த அமுக்கங்கண்டு வருந்துகிற நோயாளருக்கெல்லாம் அமெரிக்கவைத்தியசங்க சஞ்சிகையில் வெளியாகியிருக்கும் கட்டுரைஒன்று புதுநம்பிக்கை அளிப்பதாகின்றது. இந்தநோயாளரின் முதுகெலும்புநீளமுள்ள குறித்தசில சலனநரம்புநிலையங்களைச் சத்திரவைத்தியர்கள் வெட்டியெடுத்ததிலிருந்து இந்த நோயாளிகளின் மரணவிகிதம் நூற்றுக்கு ஐந்துவிகிதம் குறைந்திருக்கின்றதாம். ஒருவர் மிகுந்தமனவெழுச்சி உடையவராகும்போது கூடிய இரத்தஅமுக்கத்தைத் தாண்டிவிடுகின்ற சலனநரம்புநிலையங்களை வெளியேற்றுவதிலேயே இந்தச்சத்திரவைத்தியம் அடங்கியிருக்கின்றது.

### தண்ணீரிலிருந்து பெற்றேல்

ஜேர்மன் நாட்டிலே இரும்பு - உருக்குக் கொல்லுலைகளிலிருந்து தேவைப்படாதுகழிவாகும் காஸ்களைச் செயற்கைப்பெற்றேலாகமாற்றும் நவீன முறைஒன்றை ஜேர்மன் ரசாயனசாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இது அணுச்சக்திக்குப்பிறகு மிகமேம்பட்டதென்று விபரித்துக் கூறப்படுகிறது. இதனைக்கண்டுபிடித்தவர் றீன்புறுசென்என்ற நார்நாட்டுப் பெரிய கரிச்சுரங்க கம்பெனியின் தலைவரான டக்றர் ஹேர்பேட் கோயெல்பெல் என்பவரே. இவர் ஹிற்லரின் படைகளுக்கென்று செயற்கைப்பெற்றேலைப் பெருந்தொகையாகச் செய்யும் முறையை அபிவிர்த்திசெய்த டக்றர் பிறுன்ஸ் பிஸ்ஷர் என்பவரின் பழைய உடன்உத்தியோகஸ்தர். தாம் கண்டுபிடித்திருக்கும் முறைகொண்டு செய்யப்படும் பெற்றேலை வழமையான செயற்கைப்பெற்றேலிலும் குறைந்த விலையில் விற்கமுடியுமென்று டக்றர் கோயெல்பெல் கூறுகின்றார்.

### சென்றமகாயுத்த பலன்யாது?

சென்றஇரண்டாவது உலகமகாயுத்தத்தில் 3 கோடியே 20 லட்சம் மனிதர் கொல்லப்பட்டார்கள். 1 கோடியே 50 லட்சமுதல் 2 கோடியே 50 லட்சம்பேர்வரையில் வயோதிகர்களும், பிள்ளைகளும் ஆகாயவெடிக்குண்டுத் தாக்குதல்களால் உயிர்இழந்தார்கள். 2 கோடியே 50 லட்சம்பேர் சித்திரவதைமுகாங்களில் அநியாயமாக மடிந்தார்கள். 2 கோடியே 95 லட்சம்பேர் காயமடைந்தவர்களும், பலவீனருமானார்கள். 2 கோடியே 12 லட்சத்து 45 ஆயிரம்பேர் தங்கள் சொத்துக்கள்முழுவதையும் இழந்தார்கள். ஜேர்மனியர்களும், மத்திய ஐரோப்பியநாடுகள், தூரகிழக்குநாடுகளைச் சேர்ந்தசனங்களுமாக 4 கோடியே 50 லட்சம்பேர் தங்கள் நாடுகள், வீடுவாசல்களைக் கைவிட்டும், நாடுகடத்தப்பட்டும் போயினார்கள். யுத்தம்நிகழ்ந்த ஐந்துவருடங்களிலும் உலகம் தனதுசனத்தொகையிலே பிரான்சிலும், இத்தாலியிலும் ஒருங்கேவசிக்கின்ற சனத்தொகைக்குச் சரியானஓர் தொகையை இழந்துபோய்விட்டது.

### ஸ்ராலினுக்குச் சுகமில்லையா?

ருஷியசர்வாதிகாரியான ஸ்ராலினின் சுகநிலையைப் பரிசோதித்து அறிக்கையிடும்படியாக வீயன்னு நகரிலே முதன்மைவாய்ந்த இருதயவைத்திய நிபுணர்கள்இருவர் ஓர்ஆகாயவிமானத்திலே மஸ்கோவுக்குப் பறந்துபோனார்களாம் ; ஆனல், போனவர்கள் இன்னுமேதிரும்பி வரவில்லையென வீயன்னுவிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. சோவியற்தலைவரின் சுகநிலை அங்கலாய்ப்பை உண்டுபண்ணுவதாகவும், எம். மொலற்றெவ், எம். பெறியா, எம். மலென்கொவ் என்பவர்கள் அரசியற்கருமங்களைப் பொறுப்பேற்று நடத்துவதாகவும் அறிக்கைகள் மும்முரமாகப் பரந்துகொண்டிருக்கின்றன. முன்சொன்ன மூவரிலும் உபபிரதமரான எம். ஜோர்ஜி மலென்கொவ்என்பவரின் ஐம்பதாவதுவருடப் பிறந்தபெருநாள் சமீபத்தில்வந்தபோது, சோவியற்பத்திரிகைகள் அவருக்குப் பெரும்புகழ்மாலைகள் சூட்டியதிலிருந்து ஸ்ராலின் மரணமடைந்தால் இவரே அவரிடமாகச் சோவியற் அரசின் சர்வாதிகாரியாவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## நானுசங்கதிகள்

—❋—

—முன்னர் யப்பானிய மந்திரிமாருள் ஒருவராயிருந்த திரு. கெய்னே சுகேசென் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்து தமது சொந்தப் புதல்வரால் ஞானதீட்சை அருளப்பெற்றுச் சிலதினங்களின்பின் காலஞ்செல்லலாயினர். இவர் புதல்வரும், புதல்விகளில் ஒருவரும் கத்தோலிக்கராவர். ஓர் சகோதரி கன்னிகாஸ்திரியாய் இருக்கின்றாள்.

—சென்ற 1951-ம் ஆண்டிலே அமெரிக்க ஐக்கியதேச ஆயுதபலங்களில் மேலும் பத்துலட்சம் ஆடவர்களும், ஸ்திரீகளும் சேர்க்கப்பட்டிருப்பதாகத் திரு. ட்றூமன் ஜனதிபதி அறிக்கையிட்டிருக்கின்றார். தற்போது அமெரிக்க ஆயுதபலங்கள் எல்லாமாக 35 லட்சம்பேரைக் கொண்டிருக்கின்றன.

—அமெரிக்கவரசுக்குப் பிரித்தானியஅரசு கொடுக்கவேண்டிய கடன் 435 கோடியே 30 லட்சம் டலர். இந்தக்கடனிலே முதல் தவணையாக அது இவ்வருட ஆரம்பத்திலே 13 கோடியே 90 லட்சம டலரைத் திரும்பக் கொடுத்திருக்கிறது.

—கனடாதேச காலன்டர் எனுமிடத்தில் ஒரே பிரசவத்தில்பிறந்து உலகப்பிரசித்திபெற்ற ஐந்துபெண்பிள்ளைகளுக்கும் தற்போது 18 வயசு நடக்கின்றது. இவர்களில் பவுலின் டயோன்னே எனும் பெண்பிள்ளை குவெபெக்கைச்சேர்ந்த சென்ஜெறுமு வால்ட் எனுமிடத்திலுள்ள திறப்பிஸ்ரின் கன்னிகாசபைமடத்திலே வருகிறஆனிமாசம் ஓர் கன்னியாஸ்திரீயாகச் சேரவிருக்கின்றாள்.

— பிரித்தானியிலே மாபிள் விளையாடுவதில் பிள்ளைகளிடையே புதியதோர் உற்சாகம் பிறந்திருக்கிறது. அதனால் பிரித்தானிய பிள்ளைகள் சென்ற ஒரு வருடத்தில் ஐந்துகோடி மாபிள்களுக்குமேல் வாங்கியிருக்கிறார்கள். இந்தமாபிள்கள் உடையாதனவும், சுவீடன் தேசத்து ஓரினச் சீமெந்து கொண்டு செய்யப்படுவனவாகும்.

### கான்சருக்குப் புதியமருந்து

கான்சர்எனப்படுகின்ற பயங்கர புற்றுநோயானது சாதாரண தொற்றுநோய்க்கிருமிகளிலும் எத்தனையோமடங்கு நுண்ணியதான ஓர்வகைத் தொற்றுநோய் விஷக்கிருமிகளால் உண்டாகிறதென்பதையும், அதைக் குணமாக்கும் ஊசிமருந்துஒன்றையும் தான்கண்டுபிடித்திருப்பதாக இத்தாலியிலே மிலான்நகரைச்சேர்ந்த ஓர்டக்றரான சிஞ்ஞோறு கிளாறு ஜொலெஸ் பொண்டி எனும்மாது அறிவித்திருக்கின்றாள். புற்றுநோய்க்கு ஓர்விஷக்கிருமிதான் காரணம்என்பதைத் தான் கண்டறிந்தபின் அதனைவிருத்திசெய்து புற்றுநோயைக் குணமாக்கும் ஊசிமருந்துஒன்றையும் கண்டுபிடித்திருப்பதாக அவள் கூறுகின்றாள். ஓர் நோயாளியின் இரத்தத்தைப் பரிசோதனைசெய்துவிட்டு அந்த ஆளிலே புற்றுநோய் ஆரம்பபடியில் இருக்கிறதாஎன்பதையும் தான் சொல்ல முடியுமென்றும் அவள் தெரிவித்திருக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## கதையை நிரப்புங்கள் !

தம்பி தங்கைச்சிமாருக்கு இந்த வாரம் ஒரு நல்லசேதி சொல்லப் போகிறேன். பல தம்பிமாரும், தங்கைச்சிமாரும் நமது பாலர் பக்கத்துக்கு விடாப்பிடியாய் விஷயங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய விஷயங்களில் தகுந்தவற்றைப் பிரசுரித்து வருகிறோம். ஆனுல், அவர்களுக்குள்ளே யார் கெட்டிக்காரர் என்று இம்முறை பரிசோதிக்கப் போகிறேன். கீழே ஒருகதையை எழுதி முடியாமலே விட்டுவிடுகிறேன். அதைச் சிறந்த விதமாய்ப பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்! ஏற்ற முடிவு மாசி 28-திகதிப் பாலர் பக்கத்தில் பிரசுரிக்கப்படும். அதற்குத் தகுந்த ஒரு பரிசிலும் அளிக்கப் படும். எழுதுகிற மாணவர்கள் பாடசாலைப் பெயரைக் குறிப்பிட மறக்கவேண்டாம். விலாசம் பாலர்பக்கம்—மேற்றிராணியார் இல்லம்—யாழ்ப்பாணம்.

## (கதை) அதுதான் நல்லது

பாடசாலை முடிந்தவுடன் புஷ்பராணியும், தம்பி ஞானசேகரமும் ஆஸ்பத்திரி வீதியால் நடந்து வந்தார்கள். வேகமாக இரண்டு மோட்டர் வண்டிகள் அவர்களுக்கு எதிராக வந்து கொண்டிருந்தன. அதனுல் அவர்கள் வழி விட்டுக் கான் பக்கமாய்ப் போக நேரிட்டது. ஞானசேகரம் எதையோ கண்டுவிட்டு முகமலர்ச்சியோடு அக்காவைப் பார்த்தான். மறுகணம் கீழே குனிந்து ஒரு தங்க மோதிரத்தை எடுத்தான். புஷ்பராணியின் கண்கள் ஆச்சரியத்தினுல் அகல விரிந்தன. அதை வேண்டி இமை வெட்டாமற் பார்த்தாள். அதில் S. A. என்ற ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சுமார் ஒரு தங்கப் பவுண் இருக்கும். அழகான வேலைப்பாடு அமைந்த மோதிரம். அதற்கிடையில் ஞானசேகரம் அதை ஒத்திப் பறித்துக் கொண்டு 'வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தான். அவர்களுடைய வீடும் கிட்டி விட்டது. புஷ்பராணி "தம்பீ, தம்பீ" என்று கூப்பிட்டாள். ஆனுல் அந்தச் சத்தம் அவன் செவியில் விழுந்ததாகத் தெரியவில்லை. ..........................................

கதைத் தொடர்பு எழுதுகிறவர்கள் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுத வேண்டும். 150 சொற்களுக்கு மேல் எழுதக் கூடாது.

## கிழவன்

தடியும் ஊன்றி நடையும் தளர்ந்தனன்
தாலி கட்டிய பெண்ணும் மறந்தனள்
மடியில் காசொரு சல்லியும் இல்லையே
வளர்த்த பிள்ளைகள் மூவர் இறந்தனர்
குடியில், சண்டையில், சூது, வழக்கினில்
கொஞ்ச மோபணம் நான்செல வாக்கினேன்
படியும் என்கதை; நீரும் ஒருதினம்
பல்லுப் போன கிழவனுய் மாறுவீர்.

—அமுது

## இளவரசி வருகிறு

நமது அரசர், மாட்சிமை தங்கிய ஆறுவது ஜோர்ஜ் மன்னர். அவருக்கு இரண்டு மக்கள். இருவரும் பெண்கள். ஆண் குழந்தைகள் இல்லை. ஆகையால் அவருடைய மூத்த மகளே பட்டத்துக்குரிய இளவரசி. அவவுடைய பெயர் எலிசபேத். அவவுடைய கணவரின் பெயர் எடின்பரோ கோமகன். அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தையும், ஓர் பெண்குழந்தையும் இருக்கின்றனர். எலிசபேத் இளவரசியும், எடின்பரோ கோமகனும் இம்மாதம் 14-ந் திகதி இலங்கையைத் தரிசிக்க இருக்கின்றனர். அவர்களை வரவேற்க அரசினர் எவ்வளவோ ஆயத்தங்கள் செய்கிருர்கள். அவர்கள் தங்கியிருக்கும் வீடும், விருந்து சாப்பிடும் இடமும், பவனி போகும் தெருவும் புனிதமாகவும், அழகாகவும் இருப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. எத்தனையோ உயர்தர உத்தியோகஸ்தர் இரவு பகல் ஓய்வின்றிப் பாடுபடுகின்றனர். அவர்களுக்கு வாசித்துக் கொடுக்கும் வாழ்த்துப் பத்திரமும் மிகுந்த கவனத்துடன் ஆயத்தப்படுத்தப் படுகின்றது. தம்பீ! உலக அரசியை வரவேற்பதற்கு இவ்வளவு ஆயத்தங்கள் என்ருல் பரலோக இராசாவை உன் இருதயத்தில் வரவேற்க நீ எவ்வளவோ ஆயத்தங்கள் செய்யவேண்டும். அவர் தங்கியிருக்கும் உன் இருதய பீடத்தை எவ்வளவு தூய்மையாக நீ காப்பாற்ற வேண்டும். அவருக்குப் பரிசளிக்க நீ ஒரு ஞானப் பூஞ்செண்டு ஆயத்தப்படுத்த வேண்டாமா? அவருக்கு வாசித்துக்கொடுக்க நீ ஒரு ஞான வாழ்த்துப் பத்திரம் தயாரிக்க வேண்டாமா?

## அரசியல் ஞானி

முற்றவெளியில் ஒரு அரசியல் கூட்டம் நடந்தது. அங்கு பேசுவதற்கு வந்த பெரியார் ஒரு மர நிழலில் நாற்காலி ஒன்றின்மேல் ஏறிநின்று தொண்டை கிழியக் கத்தினுர். வழிப்போக்கர் ஒரு சிலர் அதில் வந்து சிறிதுநேரம் நின்றுவிட்டுப் போய்விட்டார்கள். ஒரு சிறுவன் மாத்திரம் உபந்நியாசம் முடியும்வரை நின்று கேட்டான். பெரியவர் பேசி முடிந்து இறங்கியதும் பையன் முதுகில் தட்டி "நீ ஒருகாலம் ஒரு அரசியல் ஞானி யாவாய்" என்று சந்தோஷத்தோடு கூறினுர். பையன் "அது இருக்கட்டும். அந்த நாற்காலியைத் தாருங்கள். என்னுடைய கடுதாசிக் கொடி இந்த மரத்தில் தொங்கிக்கொண்டது. அதுதான் நீங்கள் நாற்காலியால் இறங்கும் வரையில் காத்திருந்தேன்" என்றுன். பெரியவர் திகைத்துப்போனுர்.

## நல் மொழிகள்

ஏழையின் உடுப்புகளை அணிய எளிமை பிறக்கும். அலங்கார ஆபரணங்களை அணிந்தால் ஆங்காரம் தோன்றும். சரீரம் கொள்ளுகிற வேஷம் ஆத்துமத்திலும் பிடிக்கும்.

வெயர்வையால் முளைக்கிற விருட்சம், தர்மம். பிரயாசம் இல்லாமல் தர்மத்தின் சுவையை அனுபவிக்க முடியாது.

சுகத்துக்குப் பின் துக்கம். துக்கத்துக்குப் பின் சுகம். சுகமும் துக்கமும் மாறி மாறித் திரும்பும் வண்டிச் சில்லு.

யக்கோமே கோன்சால்வெஸ்

## புத்திமான் பலவான்

மானுப்பூர் என்பது ஒரு பெரிய கிராமம. அங்கே தனபால செட்டியார் என்ற ஒரு செல்வர் இருந்தார். அவருக்குப் பூபாலன் என்ற பெயருள்ள 13வயது நிரம்பிய ஒரு மகன் இருந்தான். அவன் மிக்க புத்திசாலியாகவும், மனத்துணிவு உள்ளவனுகவும் இருந்தான். அதே ஊரில் சோமு என்ற ஒரு பக்காத் திருடன் வசித்தான். அவன் பொல்லாத முரடன். அவனுடைய பெயரைக் கேட்டால் அந்த ஊரில் உள்ளவர்கள் எல்லாருமம நடுங்குவார்கள். பொலிசரால் கூட அந்தச் சோமுவைப் பிடிக்க முடியவில்லை. அவர்களும் அவனைப் பிடித்துத் தருகிறவர்களுக்கு ரூபா 1,000 பரிசு கொடுப்பதாக விளம்பரப் படுத்தியிருந்தனர். அப்பரிசைப் பெற எல்லாருக்கும் ஆசைதான். ஆனுல், சோமுவை நெருங்கப் பயந்து இருந்தனர்.

இந்தச் சோமு தனபால செட்டியார் வீட்டில் கொள்ளை அடிக்க ஏற்ற காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான். ஒரு முறை செட்டியார் வியாபார நிமித்தமாக அயலூரில் இரண்டு மூன்று நாள் தங்கி விட்டார். அதனைச் சோமு அறிந்து விட்டான். பூபாலனும் தந்தை இல்லாத நேரம் பார்த்துச் சோமு கொள்ளையடிக்க வரக் கூடும் என்று விழிப்பாகவே இருந்தான். ஒருநாள் இரவு 10 மணி இருக்கும். பூபாலனுடைய வீட்டிற்கு அருகே ஆள் அரவம் கேட்டது. பூபாலன் யன்னல் வழியாகப் பார்த்து அது சோமுதான் என்று தெரிந்து கொண்டான். உடனே சத்தம் செய்யாமல் பின்கதவைத் திறந்து கொண்டு வெளியே போய் விட்டான் பூபாலன்.

சோமு அவனைக் கவனிக்க வில்லை. அமைதியாக வீட்டினுள் நுழைந்து வெளியாகக் கிடந்த சில வெள்ளிப் பாத்திரங்கள் பட்டுத் துணிகளை எடுத்து மூட்டை கட்டிக் கொண்டு வெளியேறினுன். வெளியேறியவன் வீட்டின் பின்புறமாக மறைந்து மறைந்து சென்று ஒரு பாழ்ங் கிணற்றை அடைந்தான். அந்தக் கிணற்றின் படிகளில் ஒரு சிறுவன் அழுது கொண்டு இருந்தான். அதைப் பார்த்த சோமு தம்பி! ஏன் அழுகிருய்? என்று கேட்டான். சிறுவன் அழுது கொண்டே "அண்ணே! நான் கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி போட்டிருந்தேன். இன்று பின்னேரம் இக்கிணற்றை எட்டிப் பார்த்த போது சங்கிலி உள்ளே விழுந்து விட்டது. சங்கிலி இல்லாமல் வீட்டிற்குப் போனுல் அப்பா அடிப்பார். உனக்குப் புண்ணியம் கிடைக்கும் அண்ணே அதை எடுத்துத் தா" என்ருன். இதைக் கேட்ட சோமு சங்கிலியைத் தான் எடுக்க நினைத்துத் தனது மூட்டையை அந்தச் சிறுவனிடம் கொடுத்துவிட்டுத் தன்னிடம் ஆயத்தமாக இருந்த கயிற்றை அருகில் இருந்த மரத்தில் கட்டி விட்டு அதன் வழியாகக் கிணற்றுள் இறங்கினுன்.

உடனே பூபாலன் என்னும் அச்சிறுவன் கயிற்றை அறுத்து விட்டு மூட்டையுடன் அருகே இருந்த பொலிஸ் நிலையத்திற்கு ஓடி, நடந்தவற்றை அறிவித்தான். மூன்று பொலிசார் அவனுடன் சென்று கிணற்றுள் இருந்து தத்தளித்த சோமுவைப் பிடித்துக் கைவிலங்கு மாட்டிக் கொண்டு சென்றனர். பொலிஸ் தலைவர் பூபாலனுடைய புத்திசாலித் தனத்தையும், மன உறுதியையும் மெச்சி அவனுக்கு ரூபா 1,000 வெகுமதி கொடுத்தார்.

அ. ஆனந்தன்

## சுதந்திரம் பெற்ருேம்

நமது நேரிய போக்கையும், கண்ணிய கலாசாரங்களையும், ஆட்சி அறிவையும் கண்ட கண்ணியம்மிக்க ஆங்கில அரசாங்கம் 1948-ம் ஆண்டு மாசி மாதம் 4-ந் திகதி நமக்குச் சுயவரசு கொடுத்தது. இன்று நாம் சுதந்திரம் பெற்று நான்கு ஆண்டுகள் பூர்த்தி அடைந்துவிட்டன. சுதந்திரம் பெற்றுவிட்டோம் என்று திருப்தி கொண்டு இனி நாம் சும்மா இருப்பதல்ல. புத்தி விவேகமான நேரிய போக்காலும், நல்ல ஆட்சி முறையாலும், தூரதிருஷ்டித் திட்டங்களாலும் நமது சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் தன் பொறுப்புகளையும், கடமைகளையும் இனிதே ஆற்றவேண்டும். தனிமனிதனுடைய கையில் தான் நாட்டின் பெருவாழ்வு தங்கி உள்ளது. குழந்தையின் கையில் உள்ள தின்பண்டத்தைப் பறிக்கக் காக்கைகள் வட்டம் இடுவதைப் பார்த்து இருக்கிறீர்களா? இந்தக் காக்கைகளுக்குத் தப்பிக் குழந்தை தின்பண்டத்தை உருசி பார்ப்பது என்பது இலேசான காரியம் அல்ல. சிலவேளை தின்பண்டம் பறிபோவதும் அல்லாமல் குழந்தையைக் காகம் பிருண்டிக் காயப்படுத்தியும் விடுகிறது. குழந்தையின் கையில் உள்ள தின்பண்டத்தின் நிலையில்தான் நமது சுதந்திரம் இருக்கின்றது. பொதுவுடைமைக்காடியும், நாஸ்திகச் சிங்கமும் நமது சுதந்திரத்தைப் பறிக்கச் சுற்றி வட்டம் இட்டவண்ணம நிற்கின்றன. இவற்றின் வாயிலிருந்து நமது சுதந்திரத்தைப் பத்திரமாகக் காப்பாற்றவேண்டும். தம்பீ! உனது நாடு விடுதலை பெற்றது மெய். அதிலும் மேலாக உனது ஆன்மா விடுதலை அடையவேண்டும். நமது ஆன்மாவின் கடிவாளத்தை நாமே பிடித்து ஓட்டவேண்டும். பிசாசு நமது கடிவாளத்தைப் பிடித்து இருக்கும்வரை நமக்குச் சுதந்திரம் இல்லை. நாம் ஞானஸ்நானம் பெற்றபோது நாம் உலகம், சரீரம், பிசாசு இவைகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டோம் அல்லவா? அந்தச் சுதந்திரத்தை இன்றும் காப்பாற்றிக் கொள்ளுகிருயா தம்பீ!

### உதிர்ந்த முத்து

லெனினுடன் ஒரேவகுப்பில் படித்தவரும், லெனின் மிகநம்பிக்கை வைத்திருந்தவருமான ஹங்கேரிய நாட்டினர் ஒருவர் பிந்த ஓர் கத்தோலிக்க குருவாயினுர். லெனின் நோய்வாய்ப்பட்டுச் சாகக்கிடக்கையில் அவர் அவனைப் பார்க்கச் சென்ருர். லெனின் சொல்லக்கேட்டதை அந்தக்குருவானவர் அறிவிக்கிருர். அது பின்வருமாறு: "துன்புறுத்தப்பட்ட திரளான மக்களை விடுவிப்பது அவசியம்என நினைத்தேன். ஆனுல், நாங்கள் கையாண்டவழி மற்றத்துன்பங்களையும், பயங்கரத்துக்குரிய கொலைகளையும் கிளப்பிவிட்டது. கணக்கற்றமக்களின் இரத்தசாகரத்தில் நான் மூழ்கடிக்கப் படுவதைப்போல் மிகப்பயங்கர கனவு கண்டிருக்கிறேன். நமது ரூஷியாவைக்காப்பாற்ற நமக்குத் தேவையாயிருந்தது அசிசிநகர பிரான்சீசைப் போல் பத்துப்பேர். ஆனுல், இப்பொழுது காரியம் முற்றிப்போய்விட்டது. அவரைப்போல் பத்துப்பேர்கள் இருந்தால், ரூஷியாவைக் காப்பாற்றியிருக்கலாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகைசான்ற தமிழ்த்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்து படிக்குமாறு நாம் செய்வித்தல் வேண்டும்.

3. உலக இலக்கியத் திரட்டு (World classics)என்னும்பெருந் தொகைநூல்களில் நம்இலக்கிய நூல்களும் இடம்பெறும் பெருமை அடைவித்தல் வேண்டும்.

4. ஆங்கிலத்தில் B.B.C. இன் ஒலிப்புப் பொதுநிலை விதியாயிருத்தல்போலத் தமிழிற்கும் யாதானுமொரு பொதுநிலை ஒலிப்பு வேண்டும்.

5. மேற்றிசைக் கண்ணும், கீழ்த்திசைக்கண்ணும் உள்ள பல பல்கலைக் கழகங்கள் தமிழ்க் கலைகளின் தனித்தன்மையை உலகிற்கு உணர்த்துமாறு செய்வித்தல் வேண்டும்.

தமிழ்க்கலையைத் தரணி எங்கும் பரப்பவேண்டும் என்று ஆழ்ந்த கலைஞானத்தால் கதித்தெழும் துடிதுடிப்பும், அத்துடிதுடிப்பிற்கேற்ற தொண்டுள்ளமும், அவ்வுள்ளத்திற்கேற்ற தூதுப்பணியும், அப்பணிக்கேற்ற இயல்புகளும், சாதனங்களும்உடையவர் தனிநாயகஅடிகள். இயற்கை மதிநுட்பம், தோற்றப்பொலிவு, ஆராய்ந்த தலையறிவு இம்மூன்றும் தூதுவனுக்குரிய இலக்கணமாகத் திருவள்ளுவர் குறித்தார். அத்திருவள்ளுவர் தனிநாயகம்அடிகளாரை நேரில் கண்டவரைப் போலன்றோ சொல்லிவைத்திருக்கிறார்?

### கம்யூனிஸ்தரின் கைலஞ்சம்

கம்யூனிஸ்த எதிர்ப்புக் கட்சிகளின் அதிகரித்துவரும் பலத்திற்கும், மற்றும் அநேகரின் மும்முரமான எதிர்ப்புக்கும் நின்றுபிடித்துச் சமாளிக்கவியலாது செக்கோசிலவாகியநாட்டின் கம்யூனிஸ்த அரசாங்கம் கைலஞ்சம்வழங்கிக் கருமம்பார்க்கும் தந்திரோபாயத்தைக் கையாளமுன்வந்திருக்கிறது. அங்கு பிறேக்நகர் அதிமேற்றிராணியாரான பெறன் ஆண்டவர் சிறைவைக்கப்பட்டிருக்கின்றார். அதனால் அந்நகர் அதிமேற்றிராசனபதவியைக் கையேற்குமாறுதற்போது கடினநோய்வாய்ப்பட்டிருப்பவரும், புடெஜோலிஸ்நகர் மேற்றிராணியாருமான ஹிலவுச் ஆண்டவரைச் சமீபத்திலே அந்நாட்டு உதவிப்பிரதமரும், சமயகருமமந்திரியாருமான திரு. பியேர்லிங்கர் என்பார் கேட்டுநின்றார். அப்பதவியை அவர் கையேற்குமிடத்து சிறந்தவைத்தியநிபுணர்களைத்தருவித்து அவருக்குச் சிகிச்சைசெய்விப்பதாகவும், அவ்விதம் சிகிச்சைசெய்ய வரும் செலவுமுழுவதையும் அரசாங்கமே பொறுக்கச்செய்வதாயும் அவர் தெரிவித்துநின்றார். ஆனல், மேற்றிராணியாரோ அவர் கேள்விக்குஉடன்பட மறுத்துவிட்டார். மேலும் செக்கோசிலவாகியாவிலுள்ள கத்தோலிக்ககுருமாருள் பிரிவினைச் சபையிற் சேர்ந்துகொள்ளும் ஒவ்வொருவருக்கும் 200 பவுண் தருவதாகக் கம்யூனிஸ்த அரசாங்கம் சொல்லிப்பார்த்தும் பலன்ஏற்படவில்லை.

### வீரத்துவ துருவானவர்

சீனக்கம்யூனிஸ்தர்களாலே வழிநடத்தப்பட்டதாய்க் கோபாவேசங்கொண்ட சனக்கூட்டம் ஒன்று அங்கு யாங்சோநகரில் இருந்துவந்த யேசுசபையைச் சேர்ந்த வண. ஜேம்ஸ் தோண்ரன் சுவாமியாரின் மனையைத் தகர்த்துக்கொண்டு உட்பிரவேசித்து, பாதுகாப்பு நிமித்தமாகச் சிற்றாலயம் ஒன்றில் கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கும் திவ்வியநற்கருணையைக் கோவிலிற் கொண்டுபோய்த் திரும்பவும் ஸ்தாபிக்கும்படியாய் வலிந்துகேட்கலாயிற்று. சுவாமியாரோ அவர்களின் கேள்விக்கிசையமறுத்து, தமது இரத்தாசயத்துக்குநேரே இலக்குவைத்துநின்ற ஓர் கம்யூனிஸ்த போர்வீரனின் துப்பாக்கியையும், சனக்கூட்டத்தின் பெருங்கூச்சலையும் பறுவாய்பண்ணுது, சனக்கூட்டம் அவ்விடத்தைவிட்டு அகலுகிறவரையிலே அஞ்சாநெஞ்சுடன் சிற்றாலயவாயிலைக் காவல்செய்துநின்றார். சிலதினங்களின்பின் அவரும், வேறும் மூன்று குருமாரும் விசாரணை செய்யப்பெற்றபின் அறியப்படாத ஓர் இடத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். பிந்த அவர்களைப்பற்றிய செய்தியே இல்லை.

### கம்யூனிஸத்துக்குஎச்சரிக்கை

"தென்கிழக்கு ஆசியாவில் புதிதாக ஒரு கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பு நிகழும் பட்சத்தில் அமெரிக்கா, பிரித்தானி, பிரான்ஸ் மூன்றும் அத்தகைய நடவடிக்கையை, ஐ. நாடுகள் உடனே செயலில் இறங்கவேண்டிய நெருக்கடியாகக் கருதும்" என்ற எச்சரிக்கையை அமெரிக்க பிரதிநிதி ஜோன் ஷெர்மன் கூப்பர் அவர்கள் ஐ. நா. அரசியல் கம்மிற்றிக் கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறார். கம்யூனிஸ்த சீனவின்மீது தாக்குதல் ஆரம்பித்ததற்காகத் தேசிய சீனப்படைகளை அமெரிக்கா தயார்செய்து வருகிறது என்று சமீபத்திலே சோவியற் பிரதிநிதி விஷின்ஸ்கி குற்றம் சாட்டினார். அது தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸ்தர்கள் புதியதோர் ஆக்கிரமிப்பை ஆரம்பிப்பதற்குமுன் இது ஓர் அறிகுறியாக இருக்கலாம்.

அமெரிக்க பிரதிநிதி மேலும் கூறியதாவது :- விஷின்ஸ்கியின் குற்றச்சாட்டுக்கு அணுவளவும் ஆதாரம் இல்லை. அவர் கூற்று முழுப்பொய். கோறிய குடியரசுமீது கம்யூனிஸ்தர்கள் ஆக்கிரமிப்புத் தொடங்கு முன்பதாகச் சோவியற்அரசு இதேமாதிரியாகப் பொய்யையும் புழுகையும் கற்பித்ததைச் சுதந்திர உலகம் மறக்கவில்லை. அப்படிக் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பு நிகழுமாயின் உடனே ஐ. நாடுகள் நடவடிக்கையை நேரடியாகக் கோரும் அவசரநிலைமை ஏற்படும்.

### கருக்குப்பனை

சிலாபத்தைச் சேர்ந்த கருக்குப்பனை என்னும் கிராமத்தில் அர்ச். வனத்து அந்தோனியார் திருநாள் சென்ற 27-1-52 ஞாயிற்றுக்கிழமை வழமைபோலச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆலயமும் சுற்றுப்புறங்களும் மின்சாரதீபங்கள், பலவர்ணத் துவசங்களாலே அலங்கரிக்கப்பட்டிருந்தன. 18-ந்திகதிமுதல் நவதினவிழாக்கள் பத்தியருட்சியாக நடைபெற்றன. 27-ந் திகதிகாலை பாடற்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், சற்பிரசாத ஆசீர்வாதம் ஆகியவற்றுடன் திருநாள் நிறைவாயிற்று.

[illegible]

## "வலை மால்"

இப்பொழுது எங்களால் ஏராளமாகத் தருவிக்கப்பட்டு, மிகவும் திறமானதாகவும், நல்லமுறுக்குள்ளதாகவும், தற்கால விலைகளில் மீன்பிடிப்பதற்குத்தேவையான தோலி வலைமால்கள், மற்ற எல்லாவித தினிசுகளிலும கீழ்க்கண்ட இடங்களில் விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன.

எங்களிடம் உங்கள் தேவைகளைப்பெற்று
திருப்த் அடையுங்கள்.
வி. பி. பி. மூலமாகவும் ஆடர்கள் அனுப்பப்படும்.

**ஏ. எஸ். பேர்னண்டோ & பிரதர்ஸ்,**

நம். 85, கிரேண் ஸ்றீட்,
"சந்திவலைக்கடை"
நீர்கொழும்பு.

நம். 79. யூனியன் பிளேஸ்,
கொம்பனித்தெரு,
"ஸ்லேவ் ஐலன்ட்"
கொழும்பு, 2.

## JAFFNA MUNICIPAL COUNCIL

### BUDGET—1952

NOTICE is hereby given in terms of Section 212 (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Budget of the Jaffna Municipal Council containing an estimate of the available income and details of the proposed expenditure for the year 1952, considered by the Council at the Special Meeting held on the 14th December 1951 and deferred for adoption by the new Council in 1952, is to be laid before a Special Meeting of the Council to be held on Friday the 15th February 1952, as amended by the several standing committees, and will be open for public inspection at the office of the Municipal Council for one week commencing from Friday the 8th February 1952.

S. A. Sabapathy,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 6th February 1952.

### 39 றாத்தல் அபின்

மன்னார்ப்பக்கத்திலிருந்து கார்ஒன்றிலே களவாக அபின் வருகிறதெனச் செய்திகிடைத்து யாழ்ப்பாண மதுபரிபாலன இன்ஸ்பெக்றர் விஜயசிங்காவும், மற்றும்சில காவலர்களும் சென்ற2-ந் திகதி மடுறோட்டுக்குச்சென்று அங்கே காத்துநிற்கும்போது, ஓர் கார்வரவே அதைநிறுத்தும்படிசொல்லியும் அது நிறுத்தப்படவில்லையென்று, பின்னர் அது ஜீப்புடன் மோதிப்புரண்டதென்றும், அதனைப் பரிசோதனைசெய்தபோது அதனுள் முப்பத்தையாயிரம் ரூபாபெறுமதியுள்ள 39 றாத்தல் அபின் கண்டுபிடிக்கப்பட்டதென்றும் தெரியவருகிறது. இந்தக்கார் கொக்குவிலைச் சேர்ந்த திரு. எஸ். சண்முகம்பிள்ளையுடையதாம். அதனுள்இருந்தநால்வரும் 39 றாத்தல்அபினுடன் மன்னார்ப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

### அரசியலும் சமயமும்

பண்டித ஜவகர்லால் நேருஅவர்கள் சமீபத்திலே ரும்பூர் எனுமிடத்தில் பேசியபோது: "அரசியலுடன் சமயத்தைப்பிணைப்பது மிகவும்ஆபத்தானது; இந்திய அரசியற்துறையிலுள்ள வகுப்புவாதவிஷத்தை மக்கள் அகற்றுவிட்டால் நாடு சின்னபின்னமாகிவிடும். இந்தியசனசங்கம், இந்துமகாசபை எனும் இரண்டுஸ்தாபனங்களும் சமயம், கலாசாரம் ஆகியவற்றின்பேரால் அரசியலிற் புகுந்துள்ளன. இந்துமதத்திற்கும், கலாசாரத்திற்கும் இவைகள்முற்றிலும் மாறானவைகள். நாட்டிலுள்ள வகுப்புவாத ஸ்தாபனங்கள் நாட்டின் ஐக்கியத்திற்கு ஆபத்தை உண்டுபண்ணுகின்றன. நாடு வாழவேண்டுமானல் அவற்றை ஒழிக்க வேண்டியது அவசியமாகும்" எனக் கூறியிருக்கிறார்.

## NOTICE

IN THE DISTRICT COURT OF JAFFNA.

1. A. K. Cumarasamy of Vaddukkoddai
2. A. S. Rasiah of Vannarponnai &
3. G. Kandiah of Wyman Road, Nallur.

Plaintiffs.

No. 8478

K. Velayuthapillai of Tinnevely.

Defendant.

To:

The Members of the All-Ceylon Sidha Ayurveda Medical Association.

Take notice that this action has been instituted by the abovenamed Plaintiffs on behalf of themselves as members of the All-Ceylon Sidha Ayurveda Medical Association and on behalf of the other members of the said All-Ceylon Sidha Ayurveda Medical Association against the abovenamed Defendant for the recovery of the sum of Rs. 365/- being money belonging to the said Association and lying in his hands as Ex-Treasurer and which he has not handed over to the New Treasurer and a sum of Rs. 500/- as damages and for the delivery of all the account books, receipt books and other documents belonging to the said Association to the 3rd Plaintiff.

This Court has on the 15th day of January 1952 given permission to the abovenamed Plaintiffs to sue the Defendant on behalf of the members of the said Association.

The 24th day of January 1952,

By Order of Court

Sgd. **T. Sivasubramaniam,**
Secretary, D. C., Jaffna.

Drawn by:
S. Rajendran,
Proctor for Plaintiffs.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது வயிற்றில் ஏற்பட்ட நோயானது, ஆங்கில, சுதேசவைத்தியர்களிடம் சிகிச்சை பெற்றும் குணமுறாது, நான் சீவாபாயமான நிலையில் இருந்தபோது, கிளிநொச்சியிலே எட்டாம் வாய்க்காலில் எழுந்தருளியிருக்கும் பரிசுத்த லூர்து நாயகியுடையவும், அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார், அர்ச். சின்னத்தெரேசம்மாளுடையவும் சலிகையால் ஆச்சரியத்துக்குரிய வகையில் எவ்வளவோ குணமடையலானேன். நான் பூரணசுகமடைய அவர்கள் தயை பாலிக்கும்படியாக வேண்டி, நேர்த்திப் பிரகாரம் இதைப் பிரசுரிக்கிறேன்.

யோசேவ் இரத்தினசிங்கம்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 7 1952.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org